# பெரியஎழுத்து

# நல்லதங்காள் கதை

ஐதீகப்படங்களுடன்

உ

கடவுள் துணை

புகழேந்திப் புலவர் இயற்றிய

பெரிய எழுத்து

# நல்லதங்காள் கதை

[படங்களுடன்]



B. இரத்தின நாயகர் ஸன்ஸ்

திருமகள் விலாச அச்சகம்

சென்னை—1.

இதன் விலை] —— [பை. 0—50.

உ

கடவுள் துணை

# நல்லதங்காள் கதை

## தோத்திரங்கள்

### கலி விருத்தம்

இந்துவேணிய னீஸ்வரியே பொற்பினில்
நந்துவாமிந்த நல்லதங்காள் கதை
முந்துசெந்தமிழ் பொழியவொரு கொம்பு
சிந்துரமிரு சேவடி போற்றியே.

### விநாயகர் துதி

வேழமுகத்தோனே விநாயகரேமுன்னடவாய்
பேழைவயிற்ருேனே பெருமாள்மருகோனே
அத்திமுகத்தோனே அரனார்திருமகனே
சத்திக்கணபதியே சரிந்தவயிற்ருேனே
கரிமுகப்பிள்ளையாரே கணபதியேமுன்னடவாய்
பிரியமாய்நல்லதங்காள் பெண்ணின்கதைபாட
அறியாதான்நாவதனில் அன்பாய்வருவதற்கு
துரிதமுடனே துணையாகநீவருவாய்
தும்பிக்கையுள்ளவரே துன்பங்கள்வாராமல்
நம்பிக்கைவைத்தெந்தன் நாவிற்குடியிருந்து
ஆனைமுகப்பிள்ளையாரே ஐங்கரனேமுன்னடவாய்
பானைவயிற்ருேனே பரமரிடபுத்திரனே
பாடவேயெந்தனுக்கு பகவானேவந்தருளும்

### சிவசுப்பிரமணியர் துதி

திருத்தணிகைவேலவனே திருமால்மருகோனே
கருத்துவைத்துயெந்தனை நீ காத்தருளவேணுமையா
வள்ளிமணவாளா மகேஸ்வரனார்புத்திரனே
புள்ளிமயிலேறும் புண்ணியப்போரூரா
நல்லதங்காள்கதையை நலமாகப்பாடுதற்கு

புல்லறிவன்என்நாவில் புண்ணியரே நீயிருந்து
கூடத்துணையிருந்து குற்றங்கள்வாராமல்
பாடத்துணையெந்தனுக்கு பகவானேவாக்கருளும்

### சரஸ்வதி துணை

தாமரைசெங்கமலம் தன்னிற்பிறந்தவளே
கோமளசரஸ்வதியே கொம்பனையாள் நல்லதங்காள்
புண்ணியவதிகதையை புகழாகப்பாடுதற்கு
எண்ணியிருந்த எளியேனுடநாவில்
சொந்தமாய்ப்பாடுதற்கு தோகையேயிப்போது
வந்துகுடியிருப்பாய் மறையவனுர்தேவியரே
பூவிலுதித்ததொரு பொற்கொடியேயெந்தனுக்கு
நாவிற்குடியிருந்து நடத்துமம்மாயிக்கதையை

### சந்தக்கலி விருத்தம்

மஞ்சுகுழல்பிஞ்சுமுலை வஞ்சிநல்லதங்காள்
விஞ்சுவரலாறுசொல்ல மிஞ்சுசிவனுர்முன்
கொஞ்சுமுலைமாதுதரு குஞ்சரகணேசன்
செஞ்சரணகஞ்சமல ரஞ்சலிசெய்வாமால்.

### கதையின் வரலாறு

திங்கள்மும்மாரிபெய்யுஞ் சீரானநன்நாடு
எங்குமணிவிளையும் எழிலானநன்நாடு
செஞ்சாலிநெல்விளைத்து செழிக்கும்வளநாடு
தஞ்சலிறையாமல் தழைக்கும்வளநாடு
நாற்றைப்பிடுங்கிப்பள்ளர் நன்ருய்நடுவார்கள்
சேற்றைக்குழப்பிபள்ளர் திறமாய்நடுவார்கள்
வயலிற்களைபிடுங்கி மாதர்கள்போடுவார்கள்
கயலென்றுதங்கள்கண்ணை கருதியேதேடுவார்கள்
தோள்மேலெடுப்பார்கள் சுமந்துநடப்பார்கள்
ஆள்மேலெடுப்பார்கள் அசைந்துநடப்பார்கள்
கார்நெல்லறுப்பார்கள் களத்தண்டைகொட்டுவார்கள்
வார்கொள்மாட்டைபிடித்து வந்துபிணைகட்டுவார்கள்
மாரிநெல்லுதிருப்படி சார்ந்தேயுழுவார்கள்
இனிதானதொழில்களிலே ஏதும்வழுதார்கள்
ஏறடிக்கும்பண்ணையாட்கள் எங்குந்திரிவார்கள்

போரடித்துநெற்படுத்திப் பூசைபுரிவார்கள்
பூங்காபெருமைதனைச் சொல்லமுடிபோகாது
பூங்காவனப்பெருமை புகழத்தொடங்கினேன்காண்
ஈலங்குவாழைமரங்கள் இலங்குபலாமரங்கள்
குலுங்கும்பாக்குமரங்கள் நலங்கொள்தேக்குமரங்கள்
மாமரச்சோலைகளும் மருதிலுப்பைச்சாலைகளும்
தாமமிகுசந்தனமும் தவனமிகுந்தவனம்
தக்கசாமந்திகளும் சண்பகப்பூப்பந்திகளும்
மிக்ககுயில்பாட வீறுமயிலாட
ஆண்டிகள்தங்குமிடம் அரவிந்தம்பூத்தவிடம்
பாண்டிமாநாட்டில் பாகமிகவுண்டென்று
மூதுவரிஞரெல்லாம் முன்னுரைத்தசாஸ்திரத்தில்
மதுராபுரியென்று வானவர்முதல்சொல்லுவார்கள்
திக்கெட்டுமன்னர்பதம் தென்மதுரைமாநகரம்
சூழ்வினைத்துன்பமெல்லாம் தொலைக்குந்திருநகரம்
வாழ்விக்கும்அட்டசெல்வம் மன்னுந்திருநகரம்
வாணுளரிபிரமர் வந்திருக்குந்தன்நகரம்
மீனுட்சிமாதுமையாள் மேவுஞ்சீர்பொன்நகரம்
உப்பரிகைமாளிகையும் உயர்ந்தபெருமாளிகையும்
செப்பரியமாடங்களும் சேர்ந்தசித்ரக்கூடங்களும் [ம்
செம்பொன்ஞற்கோட்டைகளும் திகழரியபேட்டைகளு
அப்பொன்ஞற்கோயில்களும் அழகானவாயில்களும்
மூத்துச்சிவிகைஏறி முடிமன்னர்வீதிகளும்
தத்துப்பரியேனும் தடமன்னர்வீதிகளும்
வேல்கொடுக்கும்மன்னர்பலர் மேவியேவாழ்வீதிகளும்
கோல்கொடுக்கும்வேளாளர் கூர்ந்துவாழ்வீதிகளும்
சாத்திரஞ்சொல்லுகின்ற சதுர்மறையோர்வீதிகளும்
காத்திரஞ்சேர்வாணிபஞ்செய் கனவணிகர்வீதிகளும்
கொட்டிதட்டிபணிகள்செய்யும் கொல்லர்வாழ்வீதிகளு
தட்டிப்பணிகள்செய்யும் தட்டாரவீதிகளும் [ம்
பதினெட்டுஜாதிவகை பலமன்னர்வீதிகளும்
துதிபெற்றமதுரையிலே சொல்லவுங்கூடாது
தராதலத்துமன்னர்களில் சந்திரகுலத்துதித்தோன்
நராதிபனும்ராமலிங்க நல்லமகாராஜன்
மணிமகுடந்தாங்க மனக்களிப்புமேலோங்கி
அணிமதுரைபட்டணத்தை அரசாட்சிசெய்யவென்று

செங்கோல்பிடித்துச் சிறப்போடரசுரிமை
மங்காதமண்டலத்தை மநுநீதிதப்பாமல்
ஆறிலொருகடமை அரசனும்வாங்குவன்காண்
மாறியெவர்க்கும் வாக்குப்பிசகானே
இந்தப்புவிதனிலே இந்திராணியென்பவளைச்
சுந்தரமாய்தாலிகட்டி சுகிர்தமுடனரசிற்
சிங்காதனமேறித் தேர்வேந்தர்வீற்றிருந்தார்
சிங்காதனத்திருந்த ஆரணசாஸ்திரிமார்
வேதியரும்சோதிடரும் வேந்தர்முகம்பார்த்து
நீதியெடுத்து நிகழ்த்தலுற்ருர்மன்னனுக்கு
எட்டுநவகோண மூலகாளும்மயில்வேந்தே
கட்டந்தனக்குப்பிள்ளை பாராளவில்லேயே
தங்களரசுரிமை தானுளவில்லேயே
எங்களரசனே யாங்களென்னசெய்வோமென்ருர்
சொன்னமொழிகேட்டுத் தோன்றல்சினமடைந்து
தன்னரசுபட்டமாளத் தான்பிள்ளையில்லையென்று
எண்ணுவிசாரமுடன் ஏக்கமிகவடைந்து
மண்ணுளும்செங்கோல் மந்திரிதனக்கீந்து
மனேவிதனேயழைத்து வன்காட்டிடஞ்சென்று
களையடர்ந்தமேருவிட்டு தோன்றல்மனேவியுடன்
உலகாண்டதைமறந்து ஊமைமௌனியர்போல்
இலகுதிருநீற்றை எங்குமேதானணிந்து
சலியாதுருத்திராட்சந் தானணிந்துமனேவியுடன்
புலியாசனம்போட்டுப் பொற்பாயிருபேரும்
புல்லும்படியமர்ந்து பூசைவழிபாடு
அல்லும்பகலுமாக வாசியாலேசிவனே
மனதிலிருத்தியே வந்தித்தார்சிந்தையுள்ளே
கனகவுமைமாது கண்டாளிவர்தவசை
பரமசிவனேநோக்கிப் பார்வதியாள்சொல்லுகிருள்
வரமிகுந்தமாதேவா மாதவத்தைக்கண்டீரோ
பிள்ளைக்குவேண்டுகிற பெருந்தவசைபார்த்தீரோ
கொள்ளையிதுவரையில் குவலயத்திற்கண்டறியோம்
தவசுக்குத்தான்மகிழ்ந்து தக்கமைந்தனேக்கொடுப்பீர்
சிவபெருமான்கண்டு சிந்தைமகிழ்ச்சிகொண்டு
எருதேறியிருவருமே ஏகாந்தமாகவந்தே
விருதுபெறமைந்தனே விரும்பிமிகக்கொடுத்தார்

பெண்ணென்றுபிள்ளை ஒன்று பிறக்கும்படிகொடுத்தார்
மண்ணரசன்மனைவியோடு மாதாவைத்தான்தொழுது
விமலனைபோற்றிசெய்து வீடுவந்துசேர்ந்தார்
சமகரண்டாண்டுக்குள் தனயர்பிறந்திடவே
தக்கமைந்தனுக்கும்நல்ல தம்பியென்றுபெயருமிட்டு
ஒக்கநல்லதங்கையென உத்தமியைத்தான்வளர்த்தார்.
பள்ளிக்குவைத்தார்கள் பாலரிருவரையும்
தெள்ளுதமிழ்தெலுங்குந் தேர்ந்தேருணர்ந்தார்கள்
வில்வித்தையானையேற்றம் மிக்ககுதிரையேற்றம்
கல்விபயிற்சியெல்லாம் கற்றுத்தெளிந்தார்கள்
மைந்தன் தனக்கு மணமுடிக்கவேணுமென்று
குந்தளதேசமாளும் கோமகன்பெற்றெடுத்த
மூளியலங்காரி மொய்குழலாள் நாயகியை
நாளிட்டுக்கேட்டு நல்லமணமுடித்தார்
மணமுடித்தபத்தாநாள் மாதாயிறந்துவிட்டாள்
இணையிலிந்திராணிபோக இராமலிங்கமகாராஜன்
மனைவியும்போனவுடன் மைந்தன்தனையழைத்து
தனையன்தனக்கரசை தானீந்துசொல்லலுற்றார்
நல்லதம்பியிவ்வுலகை நாளுண்டவாறுபோல
வல்லமுடிதரித்து மண்ணுலகில்மாந்தருக்கு
குறைவுவராமலே நீ குடிகளனைவோர்க்கும்
நின்றசெங்கோல்காணாது நீதிசெலுத்திடுவாய்
உந்தனுடன்பிறந்த உற்றநல்லதங்காளை
எந்நாளும்பசுமை யெய்துமிருக்குமிடம்
ஆராய்ந்துபார்த்து அழகாய்மணமுடித்து
சீராகச்சீதனங்கள் சிந்தைமகிழ்ந்தீந்து
அரசாட்சியுலகை யாண்டிருப்பாயென்றுசொல்லி
பிச்சுமலர்க்கொன்றை பெம்மானையுள்ளிருத்தி
இராமலிங்கமன்னவனும் இறந்தவுடன்நல்லதம்பி
கருமாதிகாரியங்கள் கனமாய்முடித்தாச்சு
ஒருபோதும்பொல்லாங்கு உலகத்துக்கெய்தாமல்
தேசுபெறச்செங்கோல் செலுத்தியேவாழ்ந்திருக்க
காசிமகாராஜன் கனமதுரைவந்துசேர்ந்து
நல்லதம்பியைநோக்கி நல்லதங்காள்நாயகியை
வல்லமணம்செய்ய வார்த்தைமிகப்பேசி



பரியங்கொடுத்தானே பத்துலட்சம்பொன் நிதிகள்
பிரியமுடன் நல்லதம்பி பெண்கொடுக்கவே இசைந்தான்.

[திருக்கல்யாணச் சிறப்பு]

சேர்ந்தால்சரிகுழலே சற்குணமே நல்லதங்காள்
நாளிட்டநாள்முகூர்த்தம் நாடெங்கும்தானறியக்
கலியாணம்கலியாணம் காரிழைக்குக்கலியாணம்
என்றைக்குக்கலியாணம் எங்களிளங்கொடிக்கு
சித்திரைமாசத்திலே செல்வக்கலியாணம்
கலியாணமென்றுசொல்லிக்கப்பலேறிப்பாக்குவைத்தார்
மாட்டின்மேல்பாக்குவைத்து மனிதர்க்குபோகவிட்டார்
சின்னமடிகோலிச் சீமையெங்கும்பாக்குவைத்தார்
பெரியமடிகோலிப் பூமியெங்கும்பாக்குவைத்தார்
பனையின்மரம்பிளந்து பந்தக்கால்செப்பனிட்டார்
தென்னமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வன்னிமரம்பிளந்து வாசக்கால்செப்பனிட்டார்
மூத்துமரம்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
இட்டார்கள்பந்தலே இருபதுகாதவழி
தொட்டார்கள்பந்தலே தொண்ணுற்றுக்காதவழி
மூந்நூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலியைக் கழுத்திலேயென்றுரைத்தார்
தாலிதரிப்பதற்குத் தார்வேந்தனப்போது
அஷ்டமிட்டமங்கிலியம் அவ்வரசன தான்வாங்கி
அரகராவென்றுசொல்லி அணிந்தாரேமங்கிலியம்
கன்னித்திருக்கழுத்தில் கட்டினான்மங்கிலியம்
மாதுதிருக்கழுத்தில் மங்கிலியஞ்சூட்டினாரே
தாலிதரித்தபின்பு தார்வேந்தன் நல்லதம்பி
வந்தஉறன்முறைக்கு வழங்கினான்போஜனங்கள்
தாம்பூலபுஷ்பமுதல் தான்கொடுத்தார்வந்தவர்க்கு
பந்தல்சபைதனிலே வந்தவர்கள்முன்பாக

[சீதனச் சிறப்பு]

கலியாணவாசலிலே என்னென்னசீதனங்கள்
என்னென்னசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேஏசாதே

பட்டிநிறைந்திருக்கும் பாற்பசுவாஞ்சீதனங்கள்
ஏரிநிறைந்திருக்கும் எருமைமாடாஞ்சீதனங்கள்
காடுநிறைந்திருக்கும் கருப்பாடாஞ்சீதனங்கள்
மேட்டுக்கழனி மூளக்கழனிசீதனங்கள்
பள்ளக்கழனி பயிர்க்கழனிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்
இன்னமுண்டுசீதனம் எங்களிலங்கொடிக்கு
சீதனங்களில்லையென்று சீர்குழலேஏசவேண்டாம்
வரிசைகளில்லையென்று வார்குழலேஏசவேண்டாம்
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
தோளுக்குத்தோளு துளசிமணிசீதனங்கள்
நெற்றிக்குச்சுட்டிகட்டி நேர்விழிக்குமைகளுடன்
கையிற்சரிபவளங் கனகமணிதாவடங்கள்
மார்புசரப்பளியாம் வயிரமணிசீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
சீதனங்களில்லையென்று சீர்குழலேஏசாதே
இன்னமுண்டுசீதனங்கள் எங்களிளங்கொடிக்கு
உட்கட்டுந்தாலி யுருக்குபணிஆபரணமும்
உட்கார்ந்துமோர்கடைய மூக்காணிபொன்னாலே
சார்ந்திருந்துமோர்கடைய சாறுமணைபொன்னாலே
பிடித்துப்பால்கறப்பதற்கு பிடிக்கயறும்பொன்னாலே
அணிந்திருந்துபால்கறக்க அணைக்கயறும்பொன்னாலே
அத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியும்
ஆலாத்திபெண்களிலே ஆறுலட்சம்பெண்களுமாம்
பாக்குநறுக்கியிடும் பரிவாரமெத்தவுண்டு [மாம்
வெற்றிலைச்சுருள்மடிக்கும் வெள்ளாட்டிப்பெண்களு
தெற்குத்தெருநிறைந்த தென்னமரஞ்சோலைகளாம்
வடக்குத்தெருநிறைந்த வாழைமரஞ்சோலைகளாம்
கிழக்குத்தெருநிறைந்த கிளாமரங்கள்சீதனங்கள்
மேற்குத்தெருநிறைந்த விளாமரங்கள்சீதனங்கள்
குத்துமுலக்கைகளும் கூடைமுறம்சீதனங்கள்
இத்தனைசீதனங்கள் பெற்றாளிளங்கொடியாள்

[நல்லதங்காளும் காசிராஜனும் தங்கள் தேசம் போகுதல்]

சீதனங்கள்தான்கொடுத்து சிறப்பாகநல்லதம்பி
தங்கைமுகம்பார்த்து தார்வேந்தனேதுரைப்பான்

ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவி நாயகமே
ஏறுமென்று சொன்னவுட னிளங்கொடியும் கண்சிவந்து
அடித்துப்புரண்டழுதாள் ஆபரணமற்றுவிழ
மூட்டியழுதாளே முத்துமணியற்றுவிழ
கட்டியழுதாளே கனகமணிகழன்றுவிழ
தாவியழுதாளே தலையணைமெத்தையிலே
அப்போது நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஏண்டியம்மா தங்கையுனக் கித்தனைகோபமென்ன
மதுரையறுகாதம் வாழ்மதுரைமுக்காதம்
பொய்கையறுகாதம் பூமதுரைமுக்காதம்
நீ-நினைத்தபிரகாரம் நான்வருவேன் தங்கையென்றான்
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால் தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால் தாழ்ச்சியுண்டோ
பூவால்குறைச்சலுண்டோ பொற்கொடியே நாயகமே
ஏறுமம்மா தண்டிகையில் என்பிறவி நாயகமே
நீஏறும் தண்டிகைக்கு முன்தண்டி நம்மதென்றான்
தோழியருமுன்னடக்க தோகைமயிலணைக்கு
பாங்கியர்கள்முன்னடக்க பாவையிளங்கொடிக்கு
பாவையர்கள்தானடக்க பத்தினியும் வழிநடந்தாள்
காலாளுஞ்சேவகரும் காவலரும் முன்னடக்க
கத்திகட்டுஞ்சேவகர்கள் கன்னடியர்முன்னடக்க
ஈட்டிப்பிடிமன்னர் இருபுறமுஞ்சூழ்ந்துவர
யானையுஞ்சேனையும் அத்தனையும் முன்னடக்க
குதிரைபரிவாரம் கோடிதளம்பின் நடக்க
கட்டியங்கூறிவர கவிவாணர்பாடிவர
சிங்காரதேவதாசி தெருவில் நடனம்புரிய
ஊர்வசிரம்பையைப்போல் உலாவிநடனம்புரிய
புகுந்தாளரண்மனையில் புருஷனிணைபிரியாள்
எதிரொருவரில்லாமல் எல்லையரசாண்டிருந்தாள்
மற்றொருவரில்லாமலே மதுரையிலேவாழ்ந்திருந்தாள்
வாழும்பெருமைகளை வாக்குரைக்கக்கூடாது
வாழ்ந்திருக்கும்போதே மகாதேவர் தன்னருளால்
கிளிமொழிமாதுக்கு கெர்ப்பமதுவுண்டாகி
ஏழுவருஷத்துக்குள் ஏழுபிள்ளைபெற்றெடுத்தாள்
பெற்றபிள்ளை நல்லதங்காள் பேருண்டாய்வாழ்ந்திருந்
வாழ்ந்திருக்கும்நாளையிலே வாழ்வரசிசீமையிலே [தாள்

[நல்லதங்காளுக்கு பஞ்சகாலம் வந்தது]

பன்னிரண்டொருவருஷம் பாரமழைபெய்யவில்லை
சிறுசம்பாபெருசம்பா சீரகச்சம்பாவரகு
கார்நெல்லுகுண்டுசம்பா கம்புதினைகேழ்வரகு
துவரை அவரைகொள்ளு சோளம்நவதானியமும்
நாட்டில்மழையுமில்லை நல்லவிளைவுமில்லை
தேசஞ்செழிப்புமில்லை செந்நெல்விளைவுமில்லை
இப்படியாகப்பஞ்சம் நேர்ந்ததிளங்கொடிக்கு
வாராதபஞ்சமென்ன வந்ததிளங்கொடிக்கு
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததிங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னரைத்தோற்றபஞ்சம்
நாழியுருண்டபஞ்சம் நாயகனைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூரைபறிகொடுத்து கொழுநனைத்தோற்றபஞ்சம்
கணவனைப்பறிகொடுத்து கைக்குழந்தைவிற்றபஞ்சம்
இப்படியாக இளங்கொடிக்குவந்திருக்க
அப்பெரியபஞ்சத்திலே ஆரணங்கேதுசெய்தாள்
தாலிதவிரவைத்து தங்கமெல்லாம்விற்றுஉண்டாள்
மாலைதவிரவைத்து மற்றதெல்லாம்விற்றுஉண்டாள்
ஆலாத்திபெண்களிலே ஆறுலட்சம்விற்றுஉண்டாள்
பாக்குநெருக்கியிடும் பணிப்பெண்ணைவிற்றுஉண்டாள்
வெற்றிலைசுருள்மடிக்கும் மெல்லியரைவிற்றுஉண்டாள்
மரங்கள்முதலானதும் வந்தபட்டும்விற்றுஉண்டாள்
குத்துமுலக்கைகளை கூடைமுறம்விற்றுஉண்டாள்
அண்ணனிடசீதனத்தை அத்தனையும்விற்றுஉண்டாள்
தமையனிடசீதனத்தை தவறாமல்விற்றுஉண்டாள்
தங்கப்பணிதியெல்லாம் தவிட்டுக்குவிற்றுஉண்டாள்
இத்தனையும்தான்விற்று ஏழையாய்நின்றாளே
தங்கப்பொருள்உண்டு தாங்கமுடியாமல்
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றாள்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றாள்
பொறுக்கமுடியாமல் பிறந்தவிடத்தேபோறேனென்று
இப்படியாக இளங்கொடியாள்தானுரைத்தாள் :[ள்
அப்போது ஆளன் ஆரணங்குக்கெடுத்துரைப்பான்
அடி-இப்போதுபோகிறது இனிதல்லஉத்தமியே

வாழ்ந்துகெட்டுபோனுயானுல் வலதுசிரிப்பாரோடி [டி
கெட்டுநொந்துபோனுயானுல் கிளையிலுஞ்சேர்க்காரோ
கண்டார்சிரிப்பாரோடி காசினியோரேசிடுவார்
பார்த்தோர்நகைப்பாரோடி பாரிலுள்ளோரேசிடுவார்
உன்னுடைத்தநாயகிமார் உகந்துசிரிப்பாரோடி
வலதுக்கிடங்கொடாதே வார்குழலேநாயகமே
பொன்னே நவமணியே புனக்கிளியேசொல்கிறண்டி
ஆனாலும்பெண்மயிலே அருங்கிளியேநாயகமே
தாலிகட்டிக்கொண்டமுதல் தனிவழியேபோனதில்லை
மாலையிட்டுக்கொண்டமுதல் மறுத்துநாம்போனதில்லை
இப்போதுபோகிறது இனிதல்லஉத்தமியே
தண்டிக்குத்தண்டிபெண்ணே சரியாகவாழ்ந்தோமானுல்
வாவென்றழைப்பார்கள் வகையுண்டாய்ப்பேசுவார்கள்
கெட்டமகள்போனுயானுல் கிழிந்ததடுக்கிடுவார்
வாழ்ந்தமகள்போனுயானுல் வண்ணத்தடுக்கிடுவார்
இப்போதுபோவதுனக் கியல்பல்லஉத்தமியே
சாணியெடுத்தாகிலும் தட்டி பிழைப்போமடி
கூலியெடுத்தாகிலும்நாம் கூடிப்பிழைப்போமடி
வேலிவிறகெடுத்து விற்றுபிழைப்போமடி
இப்படியாகக்கணவன் எடுத்துரைக்கும்வேளையிலே

[நல்லதங்காள் புருஷன் சொல்தடுத்து தாய்வீடு செல்லல்.]

அப்போதுநல்லதங்காள் ஆளனுக்கேதுசொல்வாள்
பூமுடிக்குங்கூந்தலிலே புல்லெடுக்கக்காரணமோ
வேர்முடிக்குங்கூந்தலிலே விறகெடுக்கயென்விதியோ
சந்தனமிழைக்குங்கையால் சாணிதட்டக்காரணமோ
குங்குமமெடுக்குங்கையால் கூலிவேலைசெய்யலாமோ
யானைகட்டியெங்களண்ணன் அத்திபுரமாளுகிருன்
குதிரைகட்டியெங்களண்ணன் குவலயத்தையாளுகிருன்
ஆளுகிருன்சீமையெல்லாம் அரண்மனையும்பேர்போக
என்-அண்ணனரண்மனைக்கு அரசாளப்போகிறேனுன்
தமையனரண்மனைக்குத் தாய்வீடுபோரேனென்ருள்
அப்போதுஆளன் அரிவையருக்கேதுரைப்பான்
பேச்சுதனைக்கேளாமல் பெண்மயிலேபோனுயோ
போறவிடந்தனிலே பிழைமோசம்வந்துவிடும்
என்றதைக்கேட்டு எடுத்துரைப்பாள்நல்லதங்காள்

புத்திரரை நான்வளர்த்து வருவேன்காண்புண்ணியரே
மைந்தரை நான்வளர்த்து வருவேன்காண்மன்னவரே
போய்பிழைத்துவாரேனென் பொற்கொடி நமஸ்கரித்
என்பேச்சுகேளாமல் ஏந்திழைபோபோராயோ [தாள்
கொண்டவனுர்வார்த்தை கோடுதவருதே
ஆளன்சொல்தள்ளாதே அரும்பாவிசண்டாளி
புருஷன்சொல்தள்ளாதே பொல்லாதசண்டாளி
நீ-போனுலும்போருயடி புத்திரர்பதனமடி
மைந்தர்களுக்குச்சேதம் வந்ததென்று கேட்டானுனல்
நீ-ஈயாய்ப்பறந்தாலும் இருதுண்டாய்போட்டிடுவேன்
காற்ருய்ப்பறந்தாலும் கண்டதுண்டஞ்செய்திடுவேன்
மக்கள்பதனமடி மங்கையரே நடவுமென்ருன்
பிள்ளைபதனமடி பெண்ணே நடவுமென்ருன்
அப்போது நல்லதங்காள் ஆளனுக்குதெண்டனிட்டாள்
போய்வாரேனென்று புருஷனுக்குதெண்டனிட்டாள்
தோளிலொருபிள்ளைவைத்தாள் தோகைமயிலணையாள்
கக்கத்தில்பிள்ளைவைத்து கடுகவழிநடந்தாள்
முதுகின்மேல்பிள்ளைவைத்து மொய்குழலாள்தானடந
பத்தினியும்முன்னடக்கப் பத்தாவும்பின்னடக்க [து
இருவருயப்போது இசைந்துவழிநடந்து
பார்ப்பாரதெருகடந்து பாளையர்வீதிவந்தார்
வன்னித்தெருகடந்து வாழரசர்வீதிவந்தார்
செட்டித்தெருகடந்து சேணியனுர்வீதிவந்தார்
வேளாளர்தெருகடந்து வேகமுடனுக
பலதெருவுந்தான்கடந்து பக்ஷமுடன்வாராளே
தேரோடும்வீதி தெருவீதிகோடியிலே

[நல்லதங்காளுக்கு அவசகுனம் நேரிடுதல்]

கன்னிகழியாப்பெண் கையில்நெருப்பெடுத்தாள்
வாழாக்குமரியவள் மீளாநெருப்பெடுத்தாள் [ம்,
வண்ணுன்வெளுத்ததொருபுடவைகண்டாள்மங்கையரு
வாணியன்கூடையல்லோ வரக்கண்டாள்மங்கையரும்
ஓரிகுறுக்காச்சு ஒற்றைப்பார்ப்பானெதிரானுன்
சாரைகுறுக்காச்சு சர்ப்பந்தடையாச்சு
காடையிடமாச்சு கருங்குருமான்கட்டாச்சு
பூனைக்குறுக்காச்சு புதுப்பானைமுன்னுச்சு

அப்போதுதன்கணவ னரிவையர்க்கேத்துசொல்வான்
ஆகாச்சகுனம்பெண்ணே அடியெடுத்துவைக்காதே
பொல்லாச்சகுனம்பெண்ணே போகாதேபெண்மயிலே
குட்டியிட்டநாகேந்திரன் குறுக்கேயிடமாச்சு
என்றுமவருரைக்க இயலானநல்லதங்காள்
ஆகாச்சகுனத்தை அறிந்துவரவேண்டுமென்றாள்
பொல்லாச்சகுனத்தை போய்பார்க்கவேணுமென்றாள்
போய்பார்த்துவாரேனென்று பூவையுந்தெண்டனிட் [டாள்
பதிங்காதவழிதூரம் பத்தாவும்வழிவிட்டார்
மாதரைப்போகவிட்டு மன்னவனும்திரும்பிவிட்டார்
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குநடக்கலுற்றாள்
ஓங்கிவளர்ந்ததொரு மூங்கில்வனச்சாலைவிட்டு
இஞ்சிவனந்தாண்டி எலுமிச்சம்வனந்தாண்டி
சுரக்காய்காய்க்கும்வனம் சுண்டக்காய்காய்க்கும்வனம்
கொஞ்சிபழுக்கும்வனம் கோவைபடரும்வனம்
சிங்கமுறங்கும்வனம் சிறுபுலிகள்தூங்கும்வனம்
போய்நுழையாகானகத்தே போய்புகுந்தாள்கட்டழகி
வழியுந்தெரியாமல் வகைதப்பிநின்றழுதாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
பூமரத்தின்சோலையிலே பொற்கொடியும்வந்துநின்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கையரும்போய்நடந்தாள்
மக்களைச்சூழவைத்து மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளைகளைச்சூழவைத்து பெண்பெருமாளழுகலுற்றாள்
மாமரத்தின்சோலையிலே மங்கைபுலம்பலுற்றாள்
பிள்ளையழுகிறதும் பெண்ணாள்கலங்குறதும்
கன்னியழுகிறதும் காளைபுலம்புறதும்
மக்களழுகிறதை மாமரமும்பார்த்தழுமாம்
அத்துவானகானகத்தில் அழுதுபுலம்புகையில்
ஏழுபிள்ளைநல்லதங்காள் இருந்துபுலம்புகையில்
ஆனலழகுமன்னன் அண்ணன்நல்லதம்பி
ஆண்டிருக்குஞ்சீமையிலே அவனுடையமாளிகையில்

[நல்லதம்பி கனவு காண்கிறது]

தூக்கம்வருகுதென்று தூங்குமஞ்சமெத்தையிலே
தங்கப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே
சொர்ணப்பொன்கட்டிலிலே தூங்குகின்றவேளையிலே

மனையிற்பிறந்தபெண்ணுள் மாதுநல்லதம்பிறவி
தாலிதரித்துக்கொண்டு தன்புருஷன்வீடுவந்து
நாற்பத்தொருவருஷம் நலமாகவாழ்ந்திருந்து
ஏழுபிள்ளைபெற்றுமவள் இருக்கின்றவேளையிலே
பொல்லாதகாலமது சொல்லாமல்வந்ததுவாம்
பனிரெண்டொருவருஷம் பஞ்சம்வந்துநேர்ந்ததுவாம்
தாலித்தவிரமற்ற தங்கமெல்லாமுண்டபஞ்சம்
மங்கியத்தான்தவிர மற்றதெல்லாமுண்டபஞ்சம்
தாங்கமுடியாமல் தாய்வீடுவருவதுமாய்
வழிகள்தெரியாமல் வனத்தில்புலம்புவதும்
காட்டிலேசத்தமிடக் காதிலேகேட்டதுபோல்
சொர்ப்பனங்கண்டானே துரைமன்னன்நல்லதம்பி
ஒற்றைக்குரலுமென்ற ஒருத்தியுடசத்தமென்ன
அத்துவானகானகத்தில் அழுகிறுள்பெண்பெருமாள்
தூங்கியெழுந்திருந்தான் துய்யக்கனுக்கண்டதுபோல்
அலறியெழுந்திருந்தான் அல்லல்கனுக்கண்டதுபோல்
ஓங்கியெழுந்திருந்தான் ஓங்காரக்கோபமுடன்

[நல்லதம்பி காட்டில் வேட்டைக்கு வந்து தங்கையைக் காணல்]

கச்சைவரிந்துகட்டி கருங்கச்சைதானணிந்து
வாளுருவிதோளில்வைத்து மன்னனெழுந்திருந்தான்
கருநாயுஞ்சங்கிலியுங் கைகேற்றஅம்புகளும்
முள்ளிட்டவேலியெல்லாம் முருக்கம்பூவில்லுகளும்
சள்ளிட்டநாயுடனே சகலகுலபாண்டியரும்
வெள்ளானைமேலேறி வேட்டைக்குவாரானங்கே
ஆனையின்மேலேறி அதிர்வேட்டைவாருனே
குதிரையின்மேலேறி குதிரைவேட்டைவாரானே
காட்டிலேவந்துமவன் கனவேட்டையாடையிலே
வேட்டைகளாடிக் களைக்குமந்தவேளையிலே
யானைகுதிரையெல்லாம் அங்கங்கேதானிருத்தி
குதிரைபரிவாரங் கோடிதளந்தானிருத்தி
ஆணழகன்நல்லதம்பி அறியவெடுத்துரைப்பான்
ஆரடாசேவகரே அர்க்கார்கள்தம்பிமாரே
அத்துவானகானகத்தில் ஆரோபுலம்புவது
யாரோபுலம்புவது அறியவேவேணுமென்று
பூவையழுகிறதைப் போய்பார்க்கவேணுமென்று

அப்போது நல்லதம்பி ஆணழகனேது சொல்வான்
கருநாயைக்கைகொடுத்தான் காவலரைபோகவிட்டான்
செந்நாயைக்கைகொடுத்தான் சேவகரைபோகவிட்டான்
அந்நாளருளுமென்னையா அப்படியேநல்லதென்று
நல்லதம்பிதன்னுடனே நாலுலட்சம்சேவகர்கள்
காலாளுஞ்சேவகருங் கடுகெனவேயோடிவந்து
நல்லதங்காளருகில்வந்து நலமாகவதுசொல்வார்
கானகத்தில்புலம்புகிற கட்டார்கருங்குழலே
வனத்தில்புலம்புகிற வனக்கிளியேநீயாரு
ஒண்டித்தனிமையாக ஒருமையாய்த்தானிருந்து
காட்டில்புலம்புகிற காரணத்தைச்சொல்லுமென்றார்

[சேவகர்கள் காட்டில் நல்லதங்காளைக் கண்டு
அவர்கள் வரலாறு கேட்குதல்]

எந்தவூர்தாயாரே எனக்கறியச்சொல்லுமென்றார்
காட்டிலேவந்துநீ கதறிப்புலம்புவதேன்
ஒண்டியாய்த்தானிருந்து ஓங்கியழுவதென்ன
வந்தவரலாற்றை வகையாகச்சொல்லுமென்றார் [ள்
அப்போது நல்லதங்காள் அர்க்காருக்கெடுத்துரைப்பா
ஊர்களும்பேர்களும் உங்களுக்குச்சொல்லணுமா
குலங்களைக்கேட்டு அண்ணே பெண்கொள்ளவந்தாயடா
என்பாடுசொல்லவென்றால் நிலப்பாடுசாயுமடா
என்பாடுசொன்னுக்கால் எங்கும்நிலவெருக்கும்
பெண்பாடுசொல்லவென்றால் பொழுதுவிடியுமண்ணே
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாள்சேவகர்
அப்போதுசேவகர்கள் அரிவையற்குகூறலுற்றார் [க்கு
சொல்லுமம்மாதாயாரே செவிகொடுத்துகேட்போமெ
அப்போதுகாவலர்கள் ஆரணங்குகூறலுற்றார் [ன்றார்
ஐந்துபிராயமண்ணே அறியாதநாளையிலே
தாயுந்தகப்பனும் செத்துமடிந்தபோது
குடுமிதலையுடனே கட்டிவிட்டமங்கிலியம்
பாவாடைகட்டவொண்ணு பதந்தெரியாநாளையிலே
சிற்றாடைகட்டவொண்ணு சீர்தெரியாநாளையிலே
கட்டிக்கொடுத்தாரண்ணே கடுகவந்தமன்னவர்க்கு
ஒப்பிக்கொடுத்தாரண்ணே உண்டானகாவலர்க்கு
தாலிதரித்தமுதல் தாய்வீடுபோனதில்லை

மாலையிட்ட நாள்முதலாய் மற்றொருநாள்வந்ததில்லை
நான்போனநாள்முதலாய் நல்லமழையுமில்லை
பன்னிரெண்டொருவருஷம் பாரமழையுமில்லை
நாற்பத்தொருவருஷம் நன்றாகவாழ்ந்திருந்தேன்
வாழும்பெருமையிலே மக்களைப்பெற்றெடுத்தேன்
ஏழுபேர்மக்களை இன்பமாய்பெற்றெடுததேன்
பெற்றேனேமக்களை பேருண்டாய்வாழ்ந்திருந்தேன்
வளர்த்தேனேமக்களை வாழ்வுண்டாய்வாழ்ந்திருந்தேன்
பொல்லாதகாலமென்ன சொல்லாமல்வந்ததங்கே
மரக்காலுருண்டபஞ்சம் மன்னவரைத்தோற்றபஞ்சம்
ஆழாக்குருண்டபஞ்சம் ஆளனைத்தோற்றபஞ்சம்
தாலிபறிகொடுத்து தனிவழியேநின்றபஞ்சம்
கூறைப்பறிகொடுத்துக் கொழுநனைத்தோற்றபஞ்சம்.
தாலிதவிர வைத்து தங்கமெல்லாம்விற்றுவுண்டேன்
இத்தனையும்விற்றுவுண்டேன் இருக்கமுடியவில்லை
தாங்கமுடியாமல் தாய்வீடுபோறேனென்றேன்
பொறுக்கமுடியாமல் பிறந்திடத்தேபோறேனென்றேன்
அண்டமுடியாமல் அண்ணன்வீடுபோறேனென்றேன்
என்றவுரைகேட்டு இயலானசேவகர்கள்
வந்ததேபோதுமம்மா மனக்கவலைதீர்ந்துவிடும்
சுகமாய்த்தாய்பேரை சொல்லுமம்மா ஆரணங்கே
உன்பேரைநாங்கள்கேட்க உத்தமியேசொல்லுமம்மா
அப்போதுநல்லதங்காள் அரிவையருட்கூறலுற்றாள்
தாய்பேருஇந்திராணி தகப்பன்பேருராமலிங்கம்
என்பேருநல்லதங்காள் என் அண்ணன்பேர் நல்லதம்பி
என்றுமவளுரைக்க இயலானநல்லதம்பி

[நல்லதம்பி தங்கையைக்கண்டு பரதவித்தல்.]

யானைவிட்டுத்தானும் அண்ணன்குதித்திறங்கி
குதிரைவிட்டுத்தானும் கொப்பெனவேதானிறங்கி
கட்டியழுதானே கடலிறைந்தபாவனைபோல்
தாவியழுதானே தங்கைமடிமீதில்
கட்டியழுதமன்னன் களைதெளிந்தபிற்பாடு [ன
கண்ணுட்டிபெற்றதெல்லாம் கால்நடையாய்வந்ததென்
கால்நடையாயிங்குவரக் காரணமேன் என்பிறப்பே
யானையரிதாச்சோ ஆண்டிருந்தசீமையிலே

குதிரை அரிதாச்சோ குடியிருந்தசீமையிலே
ஒட்டை அரிதாச்சோ உன்னுடையசீமையிலே
புல்லக்குபஞ்சமோதான் பத்தினியாளேறிவர
பங்கிமார்பஞ்சமோதான் பத்தினியேஉந்தனுக்கு
பாலால்குறைச்சலுண்டோ பாக்கியத்தால்தாழ்ச்சியுண்டோ
சாலால்குறைச்சலுண்டோ சம்பத்தால்தாழ்ச்சியுண்டோ
எத்தால்குறைச்சலம்மா என்பிறவிஇங்குவர
ஓலைகிடையாதோ உத்தமனூர்சீமையிலே
ஓலையெழுதியல்லோ உத்தமியேயனுப்பிவைத்தால்
ஓலைகண்டநாழிகையில் ஓடிவந்துபாரேனே
மதுரையறுகாதம் வாழ்மதுரைமூக்காதம்
தாயே-நீநினைத்தபிரகாரம் நான்வருவேன்தங்கையரே
கால்நடையாயிங்குவர காரணமோஎன்பிறப்பே
என்பிறப்பேவீட்டுக்கு ஏகுமம்மா நான்வருவேன்
பிள்ளைவிளையாட புள்ளிமான்கொண்டுவாரேன்
மைந்தன்விளையாட மான்வேட்டையாடிவாரேன்
தென்னண்டைவாடையிலே தேங்காய்க்குவிந்திருக்கும்
வடவண்டைவாடையிலே மாங்காய்க்குவிந்திருக்கும்
பிள்ளையுநீயுமாய்ப் போடியம்மாதங்கையரே
உன்னைக்-கண்டவுடனவளும் கடுகச்சமைத்திடுவாள்
வீட்டுக்குப்போடியம்மா வேட்டையாடிவாரேனென்றார்
அப்போது நல்லதங்காளரிவையெடுத்துரைப்பாள்

[நல்லதம்பி தங்காளை தன் வீட்டுக்கு அனுப்புதல்]

அண்ணாடா அண்ணாடா ஆணழகாசொல்லுகிறேன்
வாசலறியேனப்பா வளவுகுறிப்பறியேன்
கோயிலறியேனப்பா குறிப்பறியேன்கொற்றவனே
அடையாளஞ்சொல்லுமென்று ளரிவையிளங்கொடியு [ம்
மூன்றுகதவிருக்கும் மோதாங்கிப்பூட்டிருக்கும்
புறக்கடைவாசலிலே பொன்னின்கதவிருக்கும்
தலைக்கடைவாசலிலே தங்கக்கதவிருக்கும்
நாலுகதவிருக்கும் நாராங்கிப்பூட்டிருக்கும்
காராம்பசுவுமுண்டு கட்டழகிவாசலிலே
காட்டானைவாசலிலே கட்டியிருக்குதம்மா
அதுவே அடையாளம் அம்மணியேபோவென்றான்
உத்தமியேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்

போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போது நல்லதங்காள் அரிவையுமேதுசொல்வாள்
அண்ணுடா அண்ணுடா ஆணழகாசொல்கிறேன்கேள்
மாதாயிருந்தாலும் வாவென்று தானழைப்பாள்
தாயற்றபோதேயண்ணு தயவுற்றுபோகலேயோ
அப்பனற்றபோதேயண்ணு ஆதரவுபோகலேயோ
மூளியலங்காரி முருகுழலாளண்ணியம்மாள்
வாவென்றழைப்பாளோ வரிசையிட்டுப்பார்ப்பாளோ
ஏனென்றுகேட்பாளோ ஏறமுகம்பார்ப்பாளோ
அண்ணருகிலிருந்தா லருமைகள்மெத்தவுண்டு
என்பிறப்பே நீயிருந்தால் எனக்குமெத்தசொந்தமுண்டு
நீயில்லாமாளிகையில் நான்போகலாகாது [ருள்
அண்ணனில்லாவீட்டில் அடியெடுத்துவையேனென்
அந்தவுரைகேட்டு ஆணழகனேதுசொல்வான்
தாயேயுனைவளர்த்த தாதியிருக்கலேயோ
அண்ணனிடபெண்சாதி ஆத்தாளிருக்கலேயோ
உடற்பிறப்பேவீட்டுக்குப்போ உன்பிறகேநான்வருவேன்
போடியம்மாதங்கையரே புத்திகளைச்சொல்லுகிறேன்
அப்போது நல்லதங்காள் அரிவைதுரிதமுடன்
நல்லதுயென்றுசொல்லி நடந்தாளே நாயகியாள்
காடுமலைதாண்டி கடுகவேநடக்கலுற்ருள்
பிள்ளைகளைப்பின்னடத்தி போகிருள் நடுத்தெருவே
மைந்தர்களைப்பின்னடத்தி போகிருள்கடைத்தெருவே

[மூளியலங்காரி நல்லதங்காள் வருவதைக் கண்டு
தன் ஆபரணமெல்லாம் பத்திரப்படுத்தல்]

அப்போது நல்லதம்பி ஆணழகன்தேவியரும்
உப்பரிகைமீதேறி உலாவுகையில்கண்டுவிட்டாள்
கண்டாளேகண்டாளே கண்ணுட்டிநாத்தியரை
கண்டுயிடிவிழுந்தாள் கட்டாணியப்போது
பார்த்துயிடிவிழுந்தாள் பாவியந்தசண்டாளி
தாதிகளைமூப்பிகளைத் தந்திரமாய்த்தானழைத்து
ஆரடிதாதிகளே அரைக்ஷணத்தில் நீங்களிப்போ
தென்னண்டைமூலைகளில் தேரோடும்வீதியிலே
வடவண்டைவீதியிலே வருகிறவளாரடிதான்
வருகிறவளாரடிதான் மாதரேபாருமென்ருள்,

அப்போதுதாதியர்க ளரிவையர்களோடிவந்து
தெருவீதிதன்னில்வந்து சேடியரும்பார்க்கலுற்றார்
பார்த்துமேயோடிவந்து பாவையர்களே துரைப்பார்
மனையிற்பிறந்தபெண் ணு மகராசிவாராளம்மா
அப்போமூளியலங்காரி மூதேவியே துரைப்பாள்
இவளிருக்குஞ்சீமையிலே இக்காலங்கருப்புமூண்டு
தானிருக்குஞ்சீமையிலே நாயகியேஏன்வருவாள்
சீமைகளைப்பூமிகளை சீர்கொள்ளவாராளோ
என்-வாழ்வைப்பறிக்கவல்லோ வாராளேசக்களத்தி
காடுகரைகளெல்லாம் கைக்கொள்ளவாராளோடி
என்குடிக்குத்தீப்புவைக்க எங்கிருந்துவாராளோடி
பொன்னுபரணமெல்லாம் போட்டழிக்கவாராளோடி
தங்கப்பணிதியெல்லாம் தான்தரிக்கவாராளோடி [விடு
தென்னண்டைக்கண்டீராளுல் தெருக்கதவைச்சாத்தி
வடவண்டைக்கண்டீராளுல் வலக்கதவைச்சாத்திவிடு
மூளியலங்காரி மூதேவிசொற்படிக்கு
தாதிகளப்போது சாத்திக்கதவடைத்தார்
இருத்திக்கதவடைத்தார் ஈரமண்போட்டடைத்தார்
பானையில்சாதமெல்லாம் பதனப்படுத்திவிட்டார்
மூளியலங்காரி மூதேவிஏதுசெய்தாள்
பட்டைகழற்றிவைத்தாள் பாடகத்தைவாங்கிவைத்தாள்
சேலைகளைந்துமவள் சிறுவாணப்பெட்டியில்வைத்தாள்
இட்டபணிதியெல்லாம் பெட்டியில்கழற்றிவைத்தாள்
பழந்துணிகந்தைகளை பாவியவள்கட்டிக்கொண்டாள்
மூகத்திலேபற்றுமிட்டு தரையிலேபள்ளிகொண்டாள்
வாசற்படிஎதிரே மங்கையரும்பள்ளிகொண்டாள்

[நல்லதங்காள் அண்ணன் வீடு சேருதல்.]

அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
தாத்தினார்தன்மனையில் நாயகியும்வந்துநின்று
கதவையுந்தட்டியவள் காரிழைநாயகியும்
நின்றளொருசாமம் நேரிழையாளப்போது
நான்பேசாதஅண்ணியுடன் பேசவேவேண்டுமென்று
அப்போதுநல்லதங்காள் அரிவையிளங்கொடியும்
அண்ணியரே அண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணன் தன்மனையை ஆளவந்தமதனியரே

அடிகாலுங்கடுக்குதண்ணி கச்சட்டைநோகுதண்ணி
நின்றகால்சோறுதடி நிலையுங்கடுக்குதண்ணி
கதவைத்திறவாயோ கண்ணுட்டி அண்ணியரே
என்றுமவள்கூறி இளங்கொடியாள் நிற்கையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
எண்ணுதஎண்ணம் எண்ணியவள்பள்ளிகொண்டாள்
ஏழுபிள்ளைபெற்றவள் இளங்கொடியாளேதுசெய்தாள்
கதவருகில்வந்து நின்று கடவுளைக்கைதொழுது
அண்ணி-பத்தரையுங்கட்டி பாங்காய்வளர்த்தபிள்ளை
எட்டரையுங்கட்டியல்லோ இயல்பாய்வளர்த்தபிள்ளை
பாலமுதுசோறுசெய்து பங்கிட்டுநான்வளர்த்தேன்
நெய்யமுதுசோறுசெய்து நேர்த்தியாய்வளர்த்தபிள்ளை
கத்தரிக்காய்போலேஅண்ணி கதறுதடிபாலரெல்லாம்
வெள்ளரிக்காய்போலேயண்ணி வெம்புதடிபாலரெல் [லாம்
தண்ணீர்தண்ணீரென்றுசொல்லி தவிக்குதடிபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதடிமக்களெல்லாம்
புத்திரர்பசியாற்றிப் புத்திகளைச்சொல்லுமண்ணி
மனதுஇரங்கலையோ மாபாவிஅண்ணியென்றாள்
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மைந்தர்பசியாற வார்த்தைகளைச்சொல்லுமண்ணி
என்னைப்பார்க்காவிட்டா லென்பிள்ளைகளைப்பாருமண்
மூத்தானவாய்திறந்து உத்தாரஞ்சொல்லுமண்ணி [ணீ
வாயைத்திறந்தாக்கால் வாய்முத்துசிந்துமடி
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமடி
தங்கமுதிர்ந்துமண்ணி தடுமாறிப்போராயடி
என்னேரமட்டுமண்ணி இதம்பாடி நிற்பேனுன்
தாளைத்திறந்தாக்கால் தங்கமுதிருமோதான்
வாயைத்திறந்து நீயும் மறுவார்த்தைசொல்லுமண்ணி
அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இரங்குந்திருமுகத்தை ஏறெடுத்துப்பார்க்கவில்லை
கவிழ்ந்ததிருமுகத்தை கண்ணெடுத்துப்பார்க்கவில்லை

[நல்லதங்காள் சாபத்தால் கதவு திறக்கப்பட்டது]

அப்போதுநல்லதங்காள் ஆரணங்குஏதுசெய்தாள்
பத்தினியும்நானனல் பத்தாவுமவரானல்

உத்தமியும்நானானல் ஒருநூல்கழுத்தியானல்
தாள்பூட்டுசங்கிலியுந் தானேதிறக்கவேண்டும்
தானேதிறக்கவேண்டும் தாய்வீட்டுபொற்கதவு
பத்தினியாள்வாக்கு பலித்ததுதானப்போது
பத்தினியாள்சொல்லினிலே பளிச்செனத்திறந்திடுமாம்
உத்தமியாள்சொல்லினிலே ஓடித்திறந்திடுமாம்
உட்கட்டுக்கதவுகள் தானேதிறந்ததப்போ
கதவுதிறந்தவுடன் கட்டழகிநல்லதங்காள்
முன்வைத்தகாலையங்கே பின்வைத்துதான்நுழைந்தா [ள்
ஆக்குமடப்பளியும் அடங்கலும்சுற்றிவந்தாள்
எங்கேசுற்றிப்பார்த்தாலும் ஏதொருபண்டமில்லை
மூளியலங்காரி மூதேவிவீற்றிருக்கும்
கூடத்திலேகனிகள் கொட்டியிருக்குதங்கே
அண்ணியற்குமுன்வந்து அருங்கிளியாள்நிற்கையிலே
பெருமையாய்நல்லதங்காள் பெற்றெடுத்தபிள்ளைகளில்
அதிலேஒருபிள்ளை அக்கனியில்ஒன்றெடுக்க
மற்றுமொருபிள்ளை மாங்காய்எடுத்திடுமாம்
தென்னண்டையோடி தேங்காய்எடுத்திடுமாம்
அப்போதுகண்டாளே அண்ணனுடதேவியரும்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
திட்டென்றெழுந்திருந்து தீவிரமாய்கைமுறித்தாள்
ஓட்டமாய்ஓடிவந்து ஓரறைதான்கொடுத்தாள்
மாங்காயைத்தான்திருகி மாங்காயுடன்போட்டாள்
தேங்காயைத்தான்திருகி தேங்காயுடன்போட்டாள்
ஆயிரம்தேங்காயிலே அழுகல்காய்கைகொடுத்தாள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
கண்ணாளன்பெற்றெடுத்த கற்கண்டேசர்க்கரையே
என்கொழுநன்பெற்றெடுத்த இந்திரசிகாமணியே
காலமழையில்லாமல் கழனிவிளையாமல்
தேதிமழையில்லாமல் செந்நெல்விளையாமல்
பயிர்கள்விளையாமல் பஞ்சங்கள்வந்ததினால்
பத்தாசொற்கேளாமல் படுபாவிசீமைவந்தேன்
மாமன்துமாளிகையில் மாங்காயைத்தின்னாதீர்
தேங்காயைத்தின்னாதீர் சிறுவரென்மைந்தர்களே
மாங்காயுந்தேங்காயும் மக்களேதின்னாதீர்
வாருங்கள்மக்களென்று மடியிலேதூக்கிவைத்தாள்



இப்படியாக இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதங்காள்தனக்கும் நாயகியாள்பிள்ளேகட்கும்
முன்னிரண்டுவருஷம் பஞ்சடைந்தகேழ்வரகை
சில்லியைந்துபானேயிலே இல்லேயென்றுலேவைத்தாள்
ஓட்டைத்திருகையெடுத்து ஒன்றிரண்டாய்மாவாக்கி
வாசலிலேநிற்குமந்த வாழைமரந்தான்பிளந்து
ஈனுதவாழை யிளவாழைத்தண்டொடித்து
வாழைமரம்பிளந்து வைத்தாளடுப்பிலேதான்
ஊதுகிருள்பாவி ஒருவாய்புகைகிளம்ப
சிந்திஞள்மூக்கையங்கே திருக்கண்சிவந்திடவே
அப்போதுநல்லதங்காள் ஆரணங்குகூறலுற்ருள்
நம்முடைய அண்ணிககு நம்மால்வருத்தமென்ன
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தவருத்தங்கள் இப்படியாய்நேர்வதென்ன [கு
என்றுசொல்லிநல்லதங்காள் எடுத்துரைத்தாளக்கினிக்
நான்-பத்தினியுமாஞல் பற்றியெரியவேண்டும்
உத்தமியுமாஞல் ஓங்கியெரியவேண்டும் [டும்
கூழுங்கொதிக்கவேண்டும் குழந்தைகள்பசியாறவேண்
என்று-பத்தினியாள்சொல்லேயிலே பற்றியெரியுதங்கே
கொம்பனேயாள்சொல்லேயிலே கூழுங்கொதித்திடுமாம்
அப்போதுநல்லதங்கா ளண்ணியருக்கேதுரைப்பாள்
காய்கிறகூழாஞலும் கட்டழகிவார்க்காயோ
கொதிக்கிறகூழதனேக் கொடுப்பாயோமதனியென்ருள்
அப்போ-மூளியலங்காரி மூதேவியேதுரைப்பாள்
தைபிறைகண்டேஞல் தரையிலிறக்குவண்டி
மாசிபிறைகண்டேஞல் மாதேயிறக்குவண்டி
முப்பிறைகண்டேஞல் முன்ஞலிறக்குவண்டி
ம்மந்தனுக்குமூந்தனுக்கும் வார்ப்பேண்டிகூழதனே
இருந்தாலிருவென்ருள் நடந்தால்நடவுமென்ருள்
அந்தவுன்ரகேட்டு அழகுள்ளநல்லதங்காள்
மங்கைமனதுநொந்து மதிமுகம்வேறுபட்டு
உள்ளம்னமெரிய உத்தமியாளேதுசொல்வாள்
குழந்தைகுடிக்கக்கொஞ்சம் கூழுக்குபஞ்சமோதான்
மக்கள்குடிக்கக்கூழு மண்டலத்திற்கிட்டாதோ
இரக்கப்புறப்பட்டால் எங்கேயும்கிட்டாதோ

வாங்களடாமக்களா வரிசையாய்என்பிறகே
வைத்துவிளையாட மச்சினிமார்மெத்தவுண்டு
கூடிவிளையாட குழந்தைமார்மெத்தவுண்டு
ஒப்பாரிஉறன்முறையா ருண்டுபலபேர்கள்
பாட்டன்வீடுபோய்நாம் பாலமிர்தமுண்ணலாமே
தாய்வீடுபோனாலும் தயிர்ச்சாதமுண்ணலாமே
அண்ணன்வீடுபோனால்நாம் ஆலித்திருக்கலாமே
வாங்களடாமக்களா வரிசையாயென்பிறகே
அண்டைவீட்டுபெண்டுகளா அசலாத்து அப்பியரே
தண்ணீர்க்குப்போறதொரு தாய்மாரேபெண்டுகளா
என் அண்ணியார்செய்ததொரு அநியாயங்கேட்டீர்களா
மதனியார்செய்ததொரு மரியாதைபார்த்தீர்களா
அண்ணனார்வந்தபின்பு அறிந்ததைசொல்லுமென்றாள்
தமையனார்வந்தபின்பு தாய்மாரேசொல்லுமென்றாள்
அந்தசொற்கேட்டிருந்த அரிவைமாரெல்லோரும்
நல்லதங்காளைப்பார்த்து நலயாகவதுசொல்வார்
எந்தனிடவீட்டுக் கெழுந்துவா நல்லதங்காள்
அவரவர்கள்தன்வீட்டுக் கழைத்தார்களெல்லோரும்
ஏண்டியம்மா தங்கையரே இத்தனைகோபமென்ன
பச்சரிசிகுத்திதாரோம் பாலும்கலந்துதாரோம்
பாலரும்நீயுமாய்ப் பசியாறிப்போங்களென்றார்
அப்போது நல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
அண்டைவீட்டுத்தண்ணீர் யாம்குடியோம் அப்பியரே
அசல்வீட்டுத்தண்ணீர் யாமருந்தோம் அப்பியரே [ள்
அண்ணனார்வந்தபின்பு அருஞ்சேதிசொல்லுமென்றா
அப்போதுபெண்களெல்லா மதிகமாயெடுத்துரைப்பார்
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன

[நல்லதங்காள் காட்டுக்குப்போகும்போது கணையாழி மோதிரமும் ஆவாரந்தழையும் அடையாளமாகப் போட்டுவைத்தல்]

கோபம்பொறுக்காமல் கொல்லைவழிதான் நடந்தாள்
ஆவாரம்செடியொடித்து அடையாளம்போடலுற்றாள்
கொன்றைதழையொடித்து கொடிவழியேபோடலுற்றா
கணையாழிமோதிரத்தை கழற்றியேபோடலுற்றாள்
அத்துவானகானகத்தில் ஆரணங்குபோய்நடந்தாள்
காட்டானைவனத்திலே கன்னிநடக்கலுற்றாள்

வாங்கடாமக்களா வரிசையாயென்பிறகே
பாட்டனூர்வைத்ததொரு பழஞ்சோலைபார்த்தழுதாள்
ஆத்தாளும்வைத்ததொரு அழகுசோலைபார்த்தழுதாள்
குடங்கொண்டு நீர்சொரிந்தேன் கொம்புகளாயிப்போது
பாவிவருவேனென்று பாலைப்பூகாய்த்திர்களோ
தோஷிவருவேனென்று துக்கமற்றுகாய்த்திர்களோ
வாருங்கள்மக்களா வரிசையாய்என்பிறகே
என்றுசொல்லி நல்லதங்காள் இயலாயுரைக்கையிலே
தண்ணீரென்றுசொல்லி தவிக்குதுபாலரெல்லாம்
அன்னமென்றுசொல்லி அலையுதுபாலரெல்லாம்
சாரைப்பழம்பறித்து இட்டாளேமக்களுக்கு
சூரைப்பழம்பறித்து கொடுத்தாளேமக்களுக்கு
தொரட்டிப்பழம்பறித்து தூங்காதேமக்களென்ருள்
கானலுறைக்குதென்று கையால்குடைபிடித்தாள்
என்னருமைமக்களா என்பிறகேவாருமென்ருள்
அந்தவனந்தாண்டி அப்பாலேபோகையிலே
அப்போது நல்லதங்கா ளரிவையருமெண்ணலுற்ருள்
உற்று நினைத்தாளே ஒருகோடியோசனையை
பர்த்தாவின்வார்த்தைதள்ளி பதறிநடந்தோமே
கணவனிடவார்த்தையது கடந்துநடந்தோமே
எங்கேயோவானம் இடித்ததென்று நானிருந்தேன்
தப்பாதேவானம் தலையிலிடித்ததென்ருள்
ஆகாயவானமது அதிரவிழுந்ததுவே
எண்ணறவாசித்து எழுத்தறக்கற்ருலும் [ருள்
பெண்புத்தியாலேயல்லோ பிழைவந்துநேர்ந்ததென்
சதிகாரப்பாவியைநான் பிறப்பென்று நம்பிவந்தேன்
பழிகாரஅண்ணனை நான் பலமென்று நம்பிவந்தேன்
இந்தஉடலோடே இனியிருப்போமானல்
பலருஞ்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
சதுரோர்சிரிப்பார்கள் சரியொத்தோரேசுவார்கள்
இந்தஉடலோடே இனியிருக்கலாகாது
மாண்டுமடிவோமென்று மங்கைமனந்தளர்ந்து
செத்துமடிவோமென்று சேயிழையாள்மனந்துணிந்தா
வாங்களடாமக்களே வரிசையாய்என்பிறகே [ள்
என்றுசொல்லி நல்லதங்கா ளியலாகவழிநடந்தாள்
அவள் அந்தவனந்தாண்டி அப்புறத்தேபோகலுற்ருள்

வேறேயொருகான்கத்தில் மெல்லியரும்வந்து நின்று
கானகத்தில்பலசிறுவர் காராவைமேய்த்திருந்தார்
மாடுமேய்க்கும்பிள்ளைகட்கு மகராசியேதுசொல்வாள்

[நல்லதங்காள் இடையரைப் பாழுங்
கிணறிருக்குமிடம் கேட்டல்]

மாடுமேய்க்கும்பிள்ளைகளா மாட்டாஞ்சிறுதம்பியரே
ஆடுமேய்க்கும்பிள்ளைகளா அறியாதபாலகரே
பச்சரிசிநான்தாரேன் பால்தாரேனுங்களுக்கு
கச்சாயம்நான்தாரேன் கண்ணுட்டிமக்களென்ருள்
பாழுங்கிணறென்று பார்க்கிலையோதம்பியரே
இருண்டகிணறென்று காண்கிலையோஎந்தனுக்கு
அப்போதுமாட்டிடைய ரறிவாளரேதுசொல்வார்
பாழுங்கிணறுனக்கேன் பத்தினியேசொல்லுமென்ருர்
இருண்டகிணறுனக்கேன் என்தாயேசொல்லுமென்ருர்
அப்போதுநல்லதங்கா ளரிவையெடுத்துரைப்பாள்
தண்ணீரின்தாகமப்பா தற்காலமிப்போது
தண்ணீர்குடிக்கவேணும் தாகவிடாய்தீரவேணும்
கட்டமுதுண்ணவேண்டும் களையாரவேண்டுமென்ருள்
அப்போது ஆட்டிடைய ரரிவையர்க்கேதுசொல்வார்
அறுகுபடர்ந்திருக்கும் ஆழமுள்ளபாழ்கிணறு
கோவைபடர்ந்திருக்கும் கொடிதானபாழ்கிணறு
எதிரேயிருக்குதம்மா ஏற்றமுள்ளபாழ்கிணறு
என்றுமேசொன்னபின்பு ஏந்திழைநல்லதங்காள்
அந்தவிடந்தாண்டி அரிவையும்வாராளே
பாழுங்கிணற்றருகே பத்தினியாள்வந்து நின்று
இருண்டகிணற்றருகே இளங்கொடியாள்வந்து நின்று
மைந்தரைப்பார்த்துமல்லோ மங்கையருமேதுரைப்பா [ள்
பாழுங்கிணற்றைப்பார்த்து பாலகரே நீர்பயந்து
இருண்டகிணற்றில்தள்ள எடுத்துவளர்த்திட்டேனே
மாளவேயிங்குவந்தோம் மாபாவிபட்டணத்தில்
மன்னவர்கேட்டுவிட்டால் மாண்டுமடிந்திடுவார்
கொற்றவர்கேட்டாக்கால் கூடமடிந்திடுவார்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும் [ள்
அண்ணன்கொடுத்ததொரு பட்டாடைமடித்துவைத்தா
அண்ணிகொடுத்ததொரு தேங்காயைமேலேவைத்தாள்

பாலூட்டும்பாலாடையை பத்தினியாளங்கேவைத்தாள்
மோர்குடிக்கும்பாத்திரத்தை மூருகுழலாளங்கேவைத்
தாமரையிலைகள்கிள்ளித் தாலிகழற்றிவைத்தாள் [தாள்
மாவிலைகிள்ளியல்லோ மங்கிலியம்வாங்கிவைத்தாள்
அப்போது நல்லதங்கா ளரிவையுமேதுசொல்வாள்
மங்கிலியமிவ்விடத்தில் மலையாய்ச்சமைக்கவேண்டும்
ஓங்கிவளரவேண்டும் ஒருகல்லாய்ச்சமைக்கவேண்டும்
கானகத்திலேவளர்ந்து கல்லாய்ச்சமைக்கவேண்டும்
பத்தினியாள்சொல்லையிலே பாராங்கல்லாகினதாம்
உத்தமியாள்சொல்லையிலே ஒருகல்லாய் நின்றதங்கே

[நல்லதங்காளும் பிள்ளைகளும் கிணற்றில் விழுந்திறத்தல்]

அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
மாளுகிறேனென்றுசொல்லி மலையேறித்தெண்டனிட்
சுத்திவலம்வந்து சூரியனைத்தெண்டனிட்டாள் [டாள்
தெண்டனிட்டபிற்பாடு தெரிவையிளங்கொடியும்
ஒவ்வொருமக்களாய் தள்ளினாள்கங்கையிலே
ஐந்துபிள்ளைஒருபெண்ணை அடுக்காகத்தள்ளிவிட்டாள்
அப்போ-தாய்க்குத்தலைமகனும் தானாகவோடினனும்
ஓடியதலைமகனும் உத்தமிக்கேதுரைப்பான்
தாயேநீநல்லதங்காள் தயவாகக்கேளுமம்மா
தப்பிப்பிழைத்திடுவேன் தாயார்பேர்சொல்லிடுவேன்
ஓடிப்பிழைத்திடுவேன் உன்பேரைச்சொல்லுகிறேன்
எள்ளுந்தண்ணீருமது இரைத்துவருவேனம்மா
திங்கள்திவசங்கள் பண்ணிவருவேனம்மா
என்னைத்தான்கொல்லாதே என்னைப்பெற்றமாதாவே
ஒருபிள்ளைபெற்று உலகத்தையாளலையோ
ஏழுபிள்ளைபெற்றுமல்லோ ஏழைமதியானயம்மா
மாடுமேய்த்துக்கஞ்சி குடிப்பேனேமாதாவே [தாவே
என்னைத்தான்கொல்லவேண்டாம் என்னைப்பெற்றமா
போனதெல்லாம்போகட்டும் இருவர்பிழைத்திடுவோம்
அப்போது நல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
அறுவர்கள்தன்னுயிர்க்கும் அதிகமோநம்முயிர்தான்
ஓடிப்பிழைத்தாலும் ஒருவனில்லையென்பார்கள்
தப்பிப்பிழைத்தாலும் தாயற்றபிள்ளையென்பார்
கண்டார்சிரிப்பார்கள் காசினியோரேசுவார்கள்

பார்த்தோர்சிரிப்பார்கள் பாரிலுள்ளோரேசுவார்கள்
வலதோர்சிரிப்பார்கள் வாயுள்ளோரேசுவார்கள்
வாடாயப்பாயென்மகனே கூடஇறந்திடுவோம்
என்றுமேநல்லதங்கா ளிடையரைத்தானழைத்து
கூடிப்பிடியுமென்ருள் கொற்றவனுர்தன்மகனே
ஓடிப்பிடியுமென்ருள் உத்தமியாள்தன்மகனே
கொச்சிஇடையரெல்லாம் கூடிப்பிடித்துவந்தார்
வந்ததோர்பிள்ளைதன்னை தள்ளினுள்கங்கையிலே
தள்ளினபிற்பாடு தனியாகநல்லதங்காள்
பார்ப்பாருடையுடுத்திப் பத்தினியாள்நல்லதங்காள்
தானுஞ்சலியாமல் தண்ணீரில்போய்விழுந்தாள்
அப்போதுகங்காதேவி மூன்றுபிழைபொறுத்தாள்
மூன்றுபிழைபொறுத்து முக்காலும்பொங்கிவிட்டாள்
அப்போதுநல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
தண்ணீர்தவக்களைப்போல் தானும்மிதக்கலுற்ருள்
பச்சைக்கிளிபோல் பறக்கிருள்பாழ்கிணற்றில்
அவளுடையகூந்தலது அறுபதுபாகமதாய்
அறுபதுபாககூந்த லலையுதுகங்கையிலே
இப்படியாக இவளிருக்கும்வேளையிலே
வேட்டைக்குப்போயிருந்த விருதுள்ளராஜனுக்கு
தோள்கள்துடிக்கிறதும் தூர்க்குறிநேருவதும்
இயலானகண்களுக்கு ஈவந்தடிக்கிறதும்
ஆடுந்தொடைகளெல்லாம் அப்போதுடித்திடுமாம்
பட்டத்துயானையங்கே பதறிக்கவிழ்ந்திடுமாம்
யானையுஞ்சேனையும் அத்தனையுந்தான்மடிந்து
குதிரைபரிவாரம் கோடிதளம்தானிறந்து
இப்படியாக இடதுகள்நேர்ந்ததங்கே
ஒற்றைநாய்தன்னுடனே உளம்நைந்துவீடுசேர்ந்தான்

[மூளியலங்காரி தன் கணவனுக்கு கள்ள உபசரணை செய்தல்]

அப்போ-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
பத்தாவுக்குபசரணை பைங்கிளியும்செய்யலுற்ருள்
கெண்டியில்தண்ணீரும் கொண்டுவந்தாள்பன்னீரும்
பன்னீரால்காலலம்பி பட்டாலடிதுவட்டி
சரணஞ்சரணமென்று சாய்த்தாள்திருமுடியை
பாதஞ்சரணமென்று பத்தாவைத்தெண்டனிட்டாள்

தண்ணீர்குடியும்பத்தா தாகவிடாங்கொள்ளும்பத்தா
வெந்நீர்குடியும்பத்தாவிடாயாற்றிக்கொள்ளுமென்ருள்
அப்போது நல்லதம்பி அவளுக்கெடுத்துரைப்பான்
மூளியலங்காரி மூதேவிக்கெடுத்துரைப்பான்
தண்ணீர்குடிப்பேண்டி விடாயாற்றிக்கொள்வேனுன்
நல்லதென் னுடன்பிறந்த நல்லதங்காள் நாயகியே
காட்டிலேகண்டுபெண்ணே வீட்டுக்கனுப்பிவைத்தேன்
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவந்தாளெங்கேயென்ருன்
என்பிறப்புநல்லதங்காள் இங்குவந்தாளெங்கேயடி
என்றுரைக்கநல்லதம்பி எடுத்துரைப்பாள்நாயகியாள்
கண்டதுகண்டாற்போல் கணவருக்கெடுத்துரைப்பாள்
வந்தாளிருந்தாள்பத்தா வண்ணப்பாய்போட்டேன்பத்
மக்களுடன்வந்த வரவைக்கண்டுதானுமப்போ [தா
கால்கண்டநேரத்திலே கடுகஉலையும்வைத்தேன்
மூனையறியாப்பச்சரிசிதனைமலைபோலநான்சமைத்தேன்
வாழைக்காய்கொய்தேன் வழுதலங்காய்காம்பறிந்தேன்
ஈரப்பலாக்காயை இருமூள்ளும்போக்கடித்தேன்
கத்தரிக்காய்கொய்தேன் கருணைக்குழம்புவைத்தேன்[ன்
முள்ளிக்காய்கொய்தேன் முருங்கக்காய்நான்சமைத்தே
பச்சென்றகீரையொன்று பசுவெண்ணெய்போல்சமைத்
பத்துவிதக்கறியும் பாங்கானபச்சடியும் [தேன்
எட்டுவிதக்கறியும் இயலானபோஜனமும்
அடுக்கடுக்காய்கறிக ளன்பாகநான்சமைத்தேன்
உன்னுடன்தான்பிறந்த உத்தமியாள்நாயகியும்
ஏழுபிள்ளைதனக்கும் இளங்கொடியாள்நாயகிக்கும்
பெரியகலமெடுத்தேன் பிள்ளைகட்குசோறுமிட்டேன்
சின்னகலமெடுத்தேன் சிற்றடிக்குச்சோறுமிட்டேன்
சுத்திக்கறியும்வைத்துசொம்புதயிர்முன்னேவைத்தேன்
அள்ளிப்பருப்புமிட்டு அதுகண்டநெய்சொரிந்தேன்
உண்ணுங்களென்று உபசரணைசெய்து நின்றேன்
தின்னுங்களென்றுசொல்லி தெருவாசல்காத்திருந்தே
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும் [ன்
உண்டுபசியாறி உட்கட்டில்வீற்றிருந்தாள்
அரிபிளவும்வெற்றிலையும்அள்ளியேநான்கொடுத்தேன்
தாம்பூலந்தான்தரித்து தயவாகநல்லதங்காள்
சொக்கட்டான்சதுரங்கந் தோகையருந்தாளுடி

காற்றடிக்கும்மண்டபத்தில்காரிழையாள்வீற்றிருந்தாள்
தூக்கம்வருகுதென்றுள் துன்னீலங்கண்ணும்
பாங்கியரைத்தானழைத்து பள்ளியறைசோடிஎன்றேன்
தாமக்கருங்குழலார் தாதியர்களோடிவந்து
சொர்னப்பொன்கட்டிலிட்டு சோடித்தார்தாதியர்கள்
தங்கப்பொன்கட்டிலின்மேல் தகுந்தமல்லிகைபூசொரிந்
பளிங்குமாமண்டபத்தில் பாங்கிமார்விரித்துதரி [தார்
கெண்டிகையும்பூமடலும் கொண்டுவந்துவைத்தார்கள்
பள்ளிகொள்ளுமென்று பாவையற்குத்தெண்டனிட்டே
அப்போதுநல்லதங்கா ளரிவையெழுந்திருந்து [ன்
பஞ்சணைமெத்தையிலே பள்ளிகொண்டாள்பாவையரும்
சாதிமணிக்கவுரி சந்தனத்தாலூதிவத்தி
கோவைமணிக்கவுரி குங்குமத்தாலூதிவத்தி
வீசினுர்தாதியர்கள் மெல்லியர்க்கிருபுறமும்
கவரிபரிமாறக் கட்டழகிதூங்கினளே
தூங்கினுள்மூன்றுசாமம் துன்னிலங்கண்ணாளும்
பொழுதுசரிந்ததென்று பொற்கொடியைநானெழுப்ப
தூங்கிமிகத்தெளிந்து துரிதமுடன்நல்லதங்காள்
என்னையேதானேக்கி இளங்கொடியாளேதுசொல்வாள்
அண்ணியரேஅண்ணியரே அண்ணனுடதேவியரே
அண்ணனரண்மனையை ஆளவந்தமதனியரே
நாத்தினரேநாத்தினரே நலமாகயெந்தனுக்கு
உடுக்கவேசேலையொன் றுத்தமியாள்தானுரைத்தாள்
அப்போதுநான்தானும் அரிவையிளங்கொடிக்கு
எனக்கொருசேலையென இருசேலைநான்கொடுத்தேன்
முத்துவர்ணசேலையதுமூன்றெடுத்துநான்கொடுத்தேன்
பஞ்சவர்ணசேலையது பத்தாவேநான்கொடுத்தேன்
அழகுமணிகொடுத்தேன். ஆபரணம்நான்கொடுத்தேன்
பங்கமணிகொடுத்தேன் தகுந்தபொருள்கொடுத்தேன்
செலவுக்கோராயிரம்பொன்சிறப்பாகநான்கொடுத்தேன்
பாலர்விளையாட பம்பரங்கள்நான்கொடுத்தேன்
சிறுவர்விளையாட சிங்காரத்தேர்கொடுத்தேன்
மாமிவீடுபோவதற்கு மச்சுரதங்கேட்டாள்
ஆளன்வீடுபோவதற்கு அழகுரதங்கேட்டாள்
அத்தனையும்நான்கொடுத்தேன் அன்பானநாத்தியற்கு
கேட்டதெல்லாம்கொடுத்தேன் கிளிமொழிமாதருக்கு

பாவையிளங்கொடியாள் பத்தினியாள்ப்ாலரெல்லாம்
பார்ப்பாரவீதியெல்லாம் பந்தாடிவந்தார்கள்
செட்டித்தெருவெல்லாம் செண்டாடிவந்தார்கள்
நீ-களைத்துவருவாயென்று கடுககுடமெடுத்தேன்
தங்கக்குடமெடுத்து தண்ணீர்க்குப்போயிருந்தேன்
அப்போது நல்லதங்கா ளரிவையிளங்கொடியும்
இருந்தாளெழுந்திருந்தா ளின்னவிடம்நானறியேன்
போனவிடம் நானறியேன் போயிருக்குந்தாவறியேன்
அப்போ-பந்தம்பிடித்துபத்தா பலதெருவுந்தேடிவந்து
காடெல்லாம்தேடிவந்தேன் காலிரண்டுநோகுதிப்போ
ஊரெல்லாம்தேடிவந்தேன் உடம்பெல்லாம்நோகுதிப்
ஆணலழகுமன்னு ஆளனேயெந்தனுக்கு [போ
ஒருபானைஜலம்வைத்து தருவாயோயெந்தனுக்கு
என்றுசொல்லக்கேட்டுமன்னன் இயலாகநல்லதம்பி
ஆங்காரக்கோபமுடன் ஆனந்தவாழ்மார்பன்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
இந்தமர்மமெல்லாம் எனக்குத்தெரியவரும்
என்பிறவி நல்லதங்காள் எங்கேதான்போனுளிப்போ
நீ-இத்தனைசெய்திருந்தால் ஏன்போருளென்பிறவி
நான் அறிவேனுன் னுசாரவார்த்தையெல்லாம்
உன்-காருடவித்தையெல்லாம் கண்டறிவேனிப்போது
போதுமடியிவ்வார்த்தை பொற்கொடியேகட்டிவையும்
இவ்வளவுசெய்திருந்தால் ஏன்போருள் நல்லதங்காள்
கொஞ்சவுபசாரம் கூறவந்தாயெந்தனுக்கு
கள்ளவுபசாரம் காட்டவந்தாயெந்தனுக்கு
என்பிறவிநல்லதங்காள் எழுந்துபோனவழியறியேன்
என்றுசொல்லித்தானெழுந்தா னியலானநல்லதம்பி
அரண்மனைஏழுகட்டும் அந்தப்புரந்தாண்டி
தேரோடும்வீதி தெருவீதிதான்கடந்து
அண்டையசல்பெண்டுகளே அக்கமாரேதங்கைமாரே
எதிர்வீட்டுப்பெண்டுகளே என்னைபெற்றதங்கைமாரே
ஆரடிதங்கையரே அசல்வீட்டுத்தங்கையரே
என்பிறப்புநல்லதங்கா ளிங்குவரக்காண்கிலையோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்காண்கிலையோ
அசல்வீட்டுத்தங்கைமார்க ளரிவையெடுத்துரைப்பார்
வந்தாளேவந்தாளே மதனியர்மாளிகைக்கு

வந்ததேபோதுமப்பா மாபாவிவாசலுக்கு
அவள்-பண்ணுதகோலமெல்லாம் பண்ணினளுன்தே
வந்தவுடனேயவள் வாசல்கதவடைத்தாள் [வி
ஓடிக்கதவடைத்தாள் ஒருமட்டாய்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்தாள் தாள்பூட்டிமண்ணறைந்தாள்
ஈரமண்கொண்டுவந்து இருபக்கந்தானறைந்தாள்
குழந்தைகுடிப்பதற்கு கூழுங்கிடையாதென்றாள்
பசியதுதான்தனியப் பச்சைஜலமில்லையென்றாள்
களைகள்தெளிவதற்கு கரண்டிஜலமில்லையென்றாள்
செய்யாதகோலமெல்லாம் செய்துவைத்தாளுன்தேவி
கவிழ்ந்ததிருமுகத்தைகண்ணெடுத்துப்பாரேனென்றாள்
பண்ணுதகோலமெல்லாம் பண்ணிவைத்தாளுன்தேவி
கொன்றைகள்வைத்திருக்குங் கோணுதசாலைவழி [ள்
அருமைமக்களெழுவருடன் ஆத்தாளும்போய்நடந்தா
போனதோர்சேனைதன்னை போர்மன்னன்தானறிந்து
தங்கையும்போனவழி தானுமறியவில்லை
என்றுமேநல்லதம்பி இயல்பாகயேதுசொல்வான்
கன்னிநல்லதங்கையைநான் காட்டிலேகண்டழுதேன்
வீட்டுக்குவந்ததொரு மெல்லியரைநானறியேன்
ஏதேதுசெய்தாளோ என்னுடையபெண்சாதி
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
மருந்துதான்வைத்தாளோ மாயப்பொடிபோட்டாளோ
ஈடுதான்வைத்தாளோ என்னவகைசெய்தாளோ
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானினைந்து

[நல்லதம்பி நல்லதங்காளை காட்டில் தேடுதல்]

அப்போ-ஒற்றைநாயோடேயல்லோ ஓடுகிறான்நல்ல
ஓட்மையாயோடும்போது உத்தமனார்வீரியற்கு [தம்பி
மீசைதுடித்திடுமாம் வெகுகோபம்வந்திடுமாம்
கண்கள்சிவந்திடுமாம் காந்தாளம்வந்திடுமாம்
பக்கச்சதைகளெல்லாம் பம்பரம்போல்துடிக்கும்
ஆடுந்தொடைகளெல்லாம் அப்பாய்பறந்திடுமாம்
ஆவாரங்கொத்ததனை அடையாளம்தான்பிடித்தான்
கணையாழிமோதிரத்தை கண்டுமேதானெடுத்தான்
எடுத்துமேநல்லதம்பி இயலாகத்தானினைப்பான்
இந்தவழியில்தானே இவளுமிருக்கவேண்டும்

என்றுமேகுதிரைவிட்டான் இயல்பாய்நல்லதம்பி
குதிரைவிடும்போது கொற்றவனுமேதுசொல்வான்
மாடுமேய்க்குந்தப்பியரே மாட்டாஞ்சிறுபாலகரே
என்பிறப்புதங்கையவ ளிங்குவரக்கண்டதுண்டோ
ஏழுபிள்ளை நல்லதங்கா ளிங்குவரக்கண்டதுண்டோ
அப்போதுமாட்டிடையர் அறியவெடுத்துரைப்பார்
வந்தாளிருந்தாளையா வழிமார்க்கம்போனாளையா
உங்கள்குலமென்றறியோம் உன்பிறவியென்றறியோம்
இருட்டுக்கிணரொன்று ஏந்திழையுங்கேட்டாளே
காட்டிக்கொடுத்தோமையா காரிகையாள்நாயகிக்கு
அப்படிச்சொல்லுகையில் அன்பானநல்லதம்பி
நீங்கள்காட்டிக்கொடுக்கலாமா கடக்கப்போய்நிற்கலா
பார்த்துமிருந்தீர்களா பழிகாரப்பாவிகளா [மா
எனக்குப்பிறப்பொழிய உமக்குப்பிறப்பல்லவோ
என்றுமேநல்லதம்பி இயல்பாகத்தானடந்தான்
காடுசெடிகளெல்லாம் கனக்கவேதேடிவாரான்
ஆறுசுனைகளெல்லாம் ஆங்காங்குதேடிவாரான்
குட்டைகுளங்கண்டாலே குதித்திறங்கிதேடிவாரான்
துறவுகளைக்கண்டாலே துள்ளிக்குதித்திடுவான்
வழியிலிப்படித்தேடி வருகின்றவேளையிலே
நல்லதங்காள்விழுந்த நற்கிணற்றின்முன்னேவந்தான்
பாலூட்டும்பாலாடை பாவாடையடையாளம்
மங்கிலியம்கண்டானே மன்னனந்தநல்லதம்பி

[நல்லதங்காள் கிணற்றில்விழுந் திறந்ததைக் கண்டு
நல்லதம்பி பரதவித்தல்]

அப்போபாழுங்கிணற்றருகே பார்த்துவயிறெரிந்தான்
இருண்டகிணற்றருகே ஏங்கிமனந்தளர்ந்தான்
நங்கைநங்கையென்றல்லோ தரையிற்புரண்டழுதான்
அம்மாடியென்றல்லோ அடித்துப்புரண்டழுதான்
முத்துபோல்கண்ணீரை முகமெல்லாஞ்சோரவிட்டு
பம்பைமயிரையெல்லாம் பாழ்கிணற்றிற்பிச்செறிந்தான்
ஐயோசிவனேயென்று அடித்துப்புரண்டழுதான்
ஓடிக்குதித்தானே உத்தமியாள்கங்கையிலே
தாண்டிக்குதித்தானே தயவானகங்கையிலே
உடன்பிறந்தாள்பிள்ளையெல்லாம் ஓடியெடுக்கலுற்றான்

தன்பிறப்புபிள்ளையைத் தாவியெடுக்கலுற்ருன்
தங்கையைமெல்லவல்லோ தடவியெடுத்தானே
வாரியெடுத்துவைத்து வண்ணமடிமேலே
முகத்தோடேமுகமணைத்து முத்தமிட்டுக்கொண்டானே
செத்தபிணத்துக்குச் சீரிட்டுப்பார்த்தழுதான்
மாண்டபிணத்துக்கு வரிசையிட்டுப்பார்த்தழுதான்
நாவல்பழமோதான் நல்லதங்காள்பெற்றபிள்ளை
கோவைப்பழமோதான் கொம்பனையாள்பெற்றபிள்ளை
கையொத்தபாலகண்டி கண்ணுட்டிபெற்றபிள்ளை
ஈச்சம்பழமோதான் என்னுச்சிபெற்றபிள்ளை
கைக்கேற்றபாலன் கண்ணுட்டிபெற்றதெல்லாம்
என்றுமேநல்லதம்பி இயலாகத்தானுமப்போ

[நல்லதம்பி நல்லதங்காளையும் பிள்ளைகளையும்
தகனஞ் செய்தல்]

தங்கையைத்தானெடுத்து தகனஞ்செய்யவேண்டுமென்
ஊதாரிதன்னுலே உடற்பிறப்பைநானிழந்தேன் [று
மாபாவிதன்னுலே மருமகனைநானிழந்தேன்
பெண்ஜாதிதன்னுலே பெண்பிறப்பைநானிழந்தேன்
ஊரில்நெருப்பெடுத்தால் உலகோர்சிரிப்பாரென்று
நாட்டினில்விறகுகொண்டால் நல்லார்சிரிப்பாரென்று
சந்தனக்கட்டைகொண்டு சதுரமாகப்பிளந்தடுக்கி
சந்தனக்கட்டையிலே தங்கையைதான்வளர்த்தி
குங்குமக்கட்டையிலே குழந்தைகளைத்தான்வளர்த்தி
வரப்பொரிநெல்லதனை வாய்க்கரிசிபோட்டானங்கே
செண்பகமாலை சிவமாலைவந்திடுமாம்
மல்லிகைமாலைகொண்டு மன்னனலங்கரித்து
சுற்றிவந்துகொள்ளிதனை வைத்தானேதோகையற்கு
வலம்வந்தழுதுகொள்ளி வைத்தானே.நல்லதம்பி
நெருப்பும்பிடிக்கவில்லை நீருய்ச்சமையவில்லை
அக்கினிப்பற்றவில்லை அனலாய்ச்சமையவில்லை
ஏண்டியம்மாதங்கையரே இத்தனைகோபமென்ன
என்மேலேகோபமது வைக்காதேஎன்பிறப்பே
பற்றியெறிந்தாயானுல் பழிகளைவாங்குவேனுன்
ஓங்கியெறிந்தாயானுல் உயிர்களைவாங்குவேனுன்
நாளைபகலுக்கு நான்வாரேன்தங்கையரே

இப்படிசொல்லியண்ணன் இரண்டடிதானடந்தான்
நடந்தவன்போனபின்பு நாயகிலக்கினிதான்
ஞப்பென்றுதானெழுந்துகொழுந்துவிட்டெரிந்திடுமாம்
இப்படியாக இருக்கின்றவேளையிலே

[நல்லதம்பி நல்லதங்காளைத் தகனஞ்செய்த வீடுவந்து சேர்தல்]

நல்லதம்பியப்பொழுது நலமாகத்தன்மனையில்
எட்டுநாள்துக்கமன்னன் இயல்பாய்சிறைகாத்து
அறுகுபொறுக்கியண்ணன் அலறத்தலைமுழுகி
முக்காட்டையிட்டுராஜன் மூலையிலேபோய்படுத்தான்
அப்போது-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தன்னுடையபத்தினியாள் தன்னெதிரேவந்துநின்று
ஆளன்முகம்நோக்கி ஆணழகியேதுசொல்வாள்
ஏன்காணும்ராஜமன்னா எந்தன்மேற்கோபமென்ன
பொல்லாததங்கையவள் போனாலும்போகிருள்
ஆகாதநல்லதங்கா ளவள்போனால்போருள்காண்
நீ-காலின்மிதியடியை கழட்டிவைக்கலாகாதோ
கொண்டுவந்தவேட்டைகளை கூறிடவுமாகாதோ
அப்போதுநல்லதம்பி ஆளனெடுத்துரைப்பான்
எனக்கும்உனக்கும்பெண்ணே எட்டுமாதவிரதமுண்டு
என்-வருத்தந்தொலைந்தாலே மாதேநானுண்டிடுவேன்
உனக்குமெனக்கும்பெண்ணே ஒருபிள்ளையுண்டல்ல
நம்முடையபிள்ளைக்கு நலமாகவிப்பொழுது [வோ
கலியாணஞ்செய்யவேணும் கண்குளிரப்பார்க்கவேணும்
கண்ணுள்ளபோதேபெண்ணே கண்காட்சிகாணவே
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளிக்கு [ணும்
மன்னவனார்நல்லதம்பி மர்மந்தொடுத்தானே
கலியாணகாரியத்தைக் கடுகெனவேசெய்யென்று

[நல்லதம்பி பிள்ளைக்குக் கலியாணஞ்செய்ய
பந்தல் அலங்கரித்தது]

சாந்தால்தரைமெழுகி சந்தனத்தால்கோலமிட்டு
கரும்பாலேகால்திறுத்தி அரும்பாலேபந்தலிட்டார்
முத்தைப்பிளந்து முகூர்த்தக்கால்செப்பனிட்டார்
வெள்ளத்தைப்பிளந்து பந்தலலங்கரித்து
தேக்குமரம்பிளந்து தெருவெல்லாம்பந்தலிட்டார்
வாழைமரம்பிளந்து வாசற்காலலங்கரித்தார்

இட்டார்கள்பந்தலங்கே இருநூற்றுக்காதவழி
தொட்டார்கள்பந்தலங்கே தொண்ணூற்றுக்காதவழி
ஓலையால்பந்தலல்லோ உத்தமர்க்குத்தானுமிட்டார்,
நல்லநம்பிசேனைகட்கு நலமாகப்பந்தலிட்டார்
தன்னுடையசேனைகட்கு தகுமானபந்தலிட்டார்
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசெய்தான்
கல்தச்சரையழைத்து கட்டழகனேதுசெய்தான்
தச்சர்களேதச்சர்களே தகுமானதச்சர்களே
என்வார்த்தைகேளுங்க ளெனக்கிசைந்ததச்சர்களே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
என்னுடன்பிறந்த எனக்கிளையாள்நல்லதங்காள்
ஏழுபிள்ளைநல்லதங்கா ளென்வீடுவந்தவிடத்தில்
பசித்தமுகம்பார்த்து பாலாடைப்பால்வாராததால்
களைத்தமுகம்பார்த்து கரண்டிப்பால்வாராததால்
என்தங்கைநல்லதங்கா ளேந்திழையும்கோபமாகி
கோபம்பொறுக்காமல் கொம்பனையுந்தானடந்து
பிள்ளைகளுந்தானுமாக போய்குதித்தாள்பொய்கையிலே
மக்களுந்தானுமாக மாண்டாளேபெருந்துறவில்
அப்படிச்செய்ததொரு அரும்பாவியென்மனையாள்
என்மனையாள்சேனைகட்கு இடிபந்தல்போடுமென்றான்
கற்பந்தல்போட்டு கவிழ்த்துவிடுசேனைகளை
அந்தவுரைகேட்டு அழகுள்ளதச்சரெல்லாம்
அரும்பாவிசேனைகட்கு அழகுபந்தல்போட்டார்கள்
பெரும்பாவிசேனைகட்கு பெருப்பந்தல்போடுவித்தார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
ஆணழகன்நல்லதம்பி அனர்த்தம்வரபந்தலிட்டார்
சூத்திரப்பந்தலிட்டார் சுழல்பந்தல்தானுமிட்டான்
கல்லாலேபந்தலது கலகப்வரத்தானுமிட்டான்
தன்னுடையசேனைகட்கு தென்னோலைப்பந்தலிட்டான்
பந்தலிட்டபிற்பாடு பார்மன்னரேதுரைப்பான்
மன்னவன்நல்லதம்பி மர்மமாயேதுரைப்பான்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
படுபாவிநாயகிக்கு பட்சமாயேதுரைப்பான்
உங்கள்மனிதருக்கு உகந்துநீபாக்கனுப்பும்
எங்கள்மனிதருக்கு யான்பாக்கனுப்புகிறேன் [தான்
என்றுரைத்துநல்லதம்பி எல்லோருக்கும்பாக்குவைத்

கப்பங்கடந்து கடலேறிபாக்குவைத்தான்
வற்றிக்கிடந்தொரு வாகானகாவேரி
காவேரிநிரம்பியிங்கே கரைபுரண்டுவந்ததுபோல்
பூரித்திருதோளும் பொன்னுபரணமின்ன
மாட்டின்மேல்பாக்குமிங்கே மனிதருக்குப்போகவிட்டா
சின்னமடிகோலி சீமையெங்கும்பாக்குவைத்தான் [ன்
பெரியமடிகோலி பூமியெங்கும்பாக்குவைத்தான்
கலியாணமென்றுசொல்லிக் கடலேறிபாக்குவைத்தான்
இப்படியாகப்பாக்கு இன்பமாய்வைத்தபின்பு
தன்னுடையசேனைகட்கும் தாம்பூலம்வைத்தபின்பு
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
ஜ்ஞாதிஜனங்களுக்கு தனிப்பாக்குதானளித்தாள்

[நல்லதம்பி ஓலையெழுதி அனுப்புதல்]

ஆணழகுமன்னன் அறிவுள்ள நல்லதம்பி
என்னவென்றுசொல்லி எழுதுவானோலைதன்னை
என்பிள்ளை தம்பியர்க்கு இயலாகவிப்பொழுது
சித்திரைமாதத்திலே சீர்பத்தாந்தேதியிலே
வெள்ளிக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பகல்முகூர்த்தமென்றுசொல்லி பாங்கானஓலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அனைவருந்தாமறிய அவ்வோலையெழுதினனே
கலியாணவோலைதன்னை கடுகெனவேயெழுதினனே
அப்போமன்னவனுர் நல்லதம்பிமர்மமாயெழுதுகிறான்
அவ்வேடுவிட்டு மறுவேடுதானெடுத்து
என்தங்கைநல்லதங்காள் இளங்கொடியாள்நாயகியும்
கூடப்பிறந்த குலப்பெண்ணுமென்தங்கை
தங்கையும்பெற்றெடுத்த தனஞ்செயர்களேழுபேரும்
பங்குனிமாதத்திலே பதின்மூன்றும்தேதியிலே
வியாழக்கிழமையிலே விடிந்தைந்துநாழிகையில்
பாழுங்கிணற்றதனில் பத்தினியும்பிள்ளைகளும்
விழுந்துஇறந்தார்கள் விதியினுகாரணத்தால்
செத்துமடிந்தார்கள் சிவலோகஞ்சேர்ந்தார்கள்
மாண்டுமடிந்தார்கள் வைகுண்டஞ்சேர்ந்தார்கள்
கொரும்பாவிதன்னாலே அரன்பதஞ்சேர்ந்தார்கள்
காடும்பாவிதன்னாலே கொம்பனையாள்தானிறந்தாள்

மாண்டுமடிந்தசேதி சீமையுள்ளார்தாமறிய
செத்துமடிந்தசேதி சீமையுள்ளார்தாமறிய
ஓலையெழுதினனே உத்தமர்சிகாமணியும்
மாண்டுமடிந்தாரென்று மன்னனேலைஎழுதினனே
ஓலையெழுதியல்லோ உகந்துகுறியுமிட்டு
இறந்தவோலைதானெழுதி இருபக்கம்சுட்டெறித்து
இருவோலைதன்னையு மிசைவாகத்தானெடுத்து
தூதுவனைத்தானழைத்து சுருக்காயெடுத்துரைப்பான்
ஓலைச்சுருள்கொடுத்து உத்தமனுக்கேதுசொல்வான்
மூளியலங்காரி மூதேவிசேனைகட்கும்
கலியாணவோலைதன்னைக் கையிற்கொடுமென்று
என்றுமேநல்லதம்பி இன்பமாய்த்தான்கொடுத்து
தூதுவரானவர்க்குச் சுருக்காயெடுத்துரைப்பான்
எந்தனதுசேனைகட்கு இறந்தவோலைகொண்டுசெல்லும்
என்றுமேநல்லதம்பி இசைவாகத்தான்கொடுத்தான்
கொடுத்ததைதான்வாங்கி கொப்பெனவேதானடக்க
அரசன்சொல்கடவாமல் அப்பொழுதேபோகலுற்றார்
மூளியலங்காரி மூதேவிபந்துகட்கு
நல்லதம்பிதன்னுடைய நலமுள்ளபந்துகட்கும்
ஓலையைத்தான்கொடுத்து உத்தமரும்வந்துவிட்டார்
இப்படியாக இருக்கின்றவேளையிலே
இருதிறத்துசேனைகளும் அங்கேபயணம்வாரார்
மூளியலங்காரி மூதேவிசேனையர்கள்
வருகின்றசந்தோஷம் மட்டுமிதங்களில்லை
பார்க்கமுடியாது பாரிலிடங்கொள்ளாது
காணமுடியாது கட்டுரைக்கலாகாது
அவரவர்கள்-தங்கக்கிரீடமும் தார்வேந்தர்தன்னழகும்
முத்துகிரீடமும் முடிமன்னர்தோளழகும்
பள்ளக்கிரீடமும் பார்மன்னர்தோளழகும்
உத்தரீயம்தான்புரள உத்தமர்கள்வாராரே
தேரேறிமன்னரெல்லாம் தெருவீதிவாராரே
யானையேறிமன்னரெல்லாம் அசைந்துமேவாராரே
கொண்டைமுடியுடனே கொண்டைதாங்கிபூவுடனே
அவ்வர்களதுதேவிகளும் அநேகம்பேர்தாதிகளும்
மஞ்சள்குளிப்புடனே மையுடனேபொட்டுடனே
பாங்கியமாரெல்லோரும் பல்லக்குதாங்கிவர

வந்துநிறைந்தாராம் வாசலிடங்கொள்ளாமல்
பந்தியாய்உட்கார்ந்தார் பந்தலிடங்கொள்ளாமல்
இவளுடையசேனைகள் இப்படியாயிருக்க
ஆணழகன் நல்லதம்பி அவனுடையசேனைகட்கு
இவனுடையமனிதருக்கு இறந்தவோலைவந்தபின்பு
ஓலைச்சுருள்படிக்க உடன்பிரித்துப்பார்த்தார்கள்
நாமக்கருங்குழலாள் நல்லதங்காள்மாண்டாளென்று
நாமமுடியழகன் நல்லதம்பிராஜாவின்
சேனைகளத்தனையும் சேர்ந்துமிகவழுதார்
முட்டியமுதார்கள் முகத்தில் அறைந்துகொண்டு
அவரவர்கடக்கையா லடித்துக்கொண்டுதானழுதார்
தாய்வீட்டுச்சேனையெல்லாம் தலைவிரித்துத்தானழுதார்
மார்பிலறைந்துகொண்டு மண்மேற்புரண்டழுதார்
போய்பார்ப்போமென்றுசொல்லி புண்ணியர்கள்வாரார்
கண்டுவருவோமென்று காரிழைமார்வாரார்கள் [கன்
வாடிமுகந்தளர்ந்து வண்ணமுகம்வேறுபட்டு
இளைப்புங்களைப்புமாக எல்லோரும்வாரார்கள்
அலைகுலையத்தலைகுலைய அனைவோரும்வாரார்கள்
வந்துமேஉள்நுழைந்தார் வாசலிடங்கொள்ளாமல்
நேர்த்தியாயமைந்திருக்கும் சூத்திரப்பந்தலின்கீழ்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்துநிறைந்தார்கள்

[நல்லதம்பி பிள்ளை தாலி தரித்தல்]

இப்படியாக இருக்கின்றவேளையிலே
நல்லதம்பிபெற்றெடுத்த நாமமுடியானை
சீயக்காய்நெல்லி சிறுபயறுகஸ்தூரி
வாசனைவர்க்கமுடன் வகைவகையாய்க்கொண்டுவந்து
மணவரையின்மேலாக மாப்பிள்ளையைக்குந்தவைத்து
மாப்பிள்ளைபெண்ணுக்கும் மணவறையில்நலங்குமிட்
சீக்கைக்கழித்தார்கள் சீராகஇருவருக்கும் [டார்
ஸ்நானங்கள்செய்துவைத்தா தாமமுடியார்கள்
ஈரத்துகில்களைந்து இழைசேர்ந்தபட்டுடுத்தி
நனைந்ததுகில்களைந்து நாகரீகப்பட்டுடுத்தி
சிவசிவாவென்றுசொல்லி திருநீற்றுக்காப்புமிட்டு
மாப்பிள்ளையைகொண்டுவந்து மன்னரலங்கரித்தார்
அநேகவிதபூஷணந்தா லலங்கரித்தானபின்பு

பொற்கொடிமாரெல்லோரும் பெண்ணையலங்கரித்தார்
இருவரையுங்கொண்டுவந்து இன்பமுள்ளபந்தலிலே
மணவறையின்முன்பாக மன்னவனைக்குந்தவைத்து
அரசாணிமுன்பாக ஆளனைக்குந்தவைத்து
மூன்னூறுபார்ப்பார்கள் முகூர்த்தமிட்டமங்கிலியம்
நானூறுபார்ப்பார்கள் நாளிட்டமங்கிலியம்
அம்மிவலமாக அரசாணிமுன்பாக
கட்டுங்கள்தாலி கழுத்திலேயென்றுரைத்தார்
அப்போது ஆணழகனப்படியேகட்டலுற்றான்
என்னவென்றுசொல்லி எடுத்தவன்கட்டலுற்றான்[னே
சிவசிவாவென்றுசொல்லி திருக்கழுத்தில்தாலிகட்டினு
அரகராவென்றுசொல்லி அழுத்தினார்மங்கிலியம்
பிரமன்முடிமூன்றுமுடி போட்டானபிற்பாடு
அங்கிருந்தமன்னரெல்லாம் அழகுபட்டங்கட்டினார்கள்
அம்மான்மாரெல்லோரும் அடங்கலும்பட்டமிட்டார்
நல்லதம்பிபெற்றெடுத்த நவமணியேதுரைப்பார்
என்-ஐயாவேஐயாவே அடியேனொருவார்த்தை
உம்முடன்தான்பிறந்த உத்தமியாள்நல்லதங்காள்
அவளுமொருசீமை ஆளுகின்றாளென்றீரே
அவள்பேரைச்சொல்லி அழகுபட்டம்கட்டுமென்றான்
அத்தைபேரைசொல்லி அணியவேவேண்டுமென்றான்
அத்தையின்பேருரைக்க ஆணழகன்வயிறெரிந்து
பொன்னின்குடமேயென் பூபாலராஜாவே
அத்தையைக்கொள்றவள்தான் அரும்பாவிஉன்தாயார்
மாமியைக்கொன்றவள்தான் மாபாவிஉன்தாயார்
என்று-அதிகவயிறெரிந்து அப்போதுநல்லதம்பி
வாளையுருவி மன்னனுந்தானெழுந்தான்
தகப்பனிடகோபமதை தார்வேந்தன்தான்பார்த்து
அண்ணுவே அண்ணுவே அதிககோபங்கொள்ளாதே
கலியாணவாசலிலே கலக்கங்கள்வையாதே
இங்குள்வைத்திருந்தசூத்திரங்களெனக்குத்தெரியவரும்
அதற்குமேல்சூத்திரங்களறிவேன்காணென்தகப்பா
இன்னமொருநாழிகையி லிங்கேதெரியுதுபார்
மூளியலங்காரி மூதேவிசேனையெல்லாம்
அவளுடையசேனையெல்லாம் அரன்பாதஞ்சேருதுபார்
மாதாவின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார்

பதராதேபதராதே பட்சமுள்ளஎன்தகப்பா
அரும்பாவிசேனையெல்லாம் அடியோடேமாளுதுபார்
மாபாவியின்சேனையெல்லாம் மாண்டுமடியுதுபார் [ன்
பொறும்பொறுமென்று பொன்னடிக்குதெண்டனிட்டா
அப்போ-ஆறினன்கோபம் அமர்ந்தான்கொலுதனிலே
கலியாணசடங்குகள் கடுகமுடிந்தவுடன்
மூளியலங்காரி மூதேவிநாயகிக்கு
மன்னவனார் நல்லதம்பி மர்மமாயெடுத்துரைப்பான்
உங்கள்மனிதருக்கு உண்ணவே நீபடைப்பாய்
எங்கள்மனிதருக்கு யான்படைப்பேன்சாதனங்கள்
தன்கணவன்சொன்னபடி சம்மதித்தாள்மூதேவி
அப்போதுபந்திகள் அமர்த்தினார்பந்தலிலே
மூதேவிசேனைகள் மூடிமன்னரத்தனையும்
சூத்திரப்பந்தலின்கீழ் சூழ்ந்திருந்தாரெல்லோரும்
நல்லதம்பிசேனையெல்லாம் நலமானபந்தலிலே
பக்கங்கொலுவிருந்து பந்தியமர்ந்தார்கள்
வரிசைவரிசையாக வந்தார் இலைபோட்டு
வாழையிலைபோட்டு வட்டித்தார்சாதங்கறி
இவளுடையசேனைக்கும் இவள்பரிமாறிவாருள்
நல்லதம்பிசேனைக்கு நங்கையவளேதுசெய்தாள்
வஞ்சனையாகவல்லோ வட்டித்திவாராளே
வரகரிசிசாதமது வட்டித்தாளப்போது
அகத்திக்கீரைகுழம்பதனை அள்ளியவள்வார்த்து
வஞ்சனைசெய்துமல்லோ வாராளலங்காரி
தங்களுடையசேனைக்குத் தகுந்தபடிஏதுசெய்தாள்
குத்துப்பருப்புமிட்டாள் கூசாமல்நெய்சொரிந்தாள்
அள்ளிப்பருப்புமிட்டாள் அதுகண்டுநெய்வார்த்தாள்
பத்துவிதக்கறியும் பதினெட்டுபச்சடியும்
எட்டுவிதக்கறியும் இயலானபச்சடியும்
சுத்திக்கறியும்வைத்து சொம்புதயிர்முன்னேவைத்தாள்
'உண்ணுங்களென்றுசொல்லி உபசரணைசெய்திருந்தாள்
நல்லதம்பிசேனைகட்கு நடக்குதுயிந்தவிதம்
அப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியும்
தன்னுடையசேனைகட்கு தான்பரிமாறிவாராள்
பாவையுடசேனையெல்லாம் பந்தியமர்ந்தார்கள்
அந்தநல்லவேளையிலே அங்கிருந்தசேனையர்கள்

ஆகாதகுறிகள் அட்சணமேகண்டார்கள்
இருக்கின்றமன்னருக்கு இடதுதோள் துடித்திடுமாம்
வைத்திருந்தசாதங்கறி ரத்தகவுலடிக்கும்
உற்றபதார்த்தவகை உதிரகவுலடிக்கும்
அங்கிருந்தசேனையெல்லாம் அவர்களுமேதுசொல்வா
அப்போதுசேனையர்க ளடங்கலுமேதுசொல்வார் [ர்
என்னமோஏதோ இடிவந்துநேர்ந்திடுமோ
மாளாப்பழிநமக்கு மீளாமல்வந்திடுமோ
தீராப்பழிநமக்கு சேரவேவந்திடுமோ
என்றுசொல்லிமன்னவர்க ளேங்கிமனந்தளர்ந்து
சிந்தைகலங்கியவர் திடுக்கிட்டுமெய்மறந்து
என்னமோஏதோவென்று இருக்கின்றவேளையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நல்லதம்பிசேனைகட்கு நன்ருய்ப்படைக்கலுற்ருள்
அகத்திக்கீரைகுழம்பு அடவாகத்தான்வார்த்தாள்
உண்ணுங்களென்று உபசாரணைசெய்துவாராள்
சாதமும்கீரையும் நல்லதம்பிசேனையுண்ணுகிருர்
முன்சோறுஉண்டுமல்லோ பின்சோறெடுக்கும்போது

[நல்லதம்பி ஆசாரியரைக்கண்டு மூளியலங்காரி சேனையின்பேரில் சுழற்பந்தலை தட்டி மடியவைத்தல்]

அப்போதுநல்லதம்பி ஆசாரிக்கெடுத்துரைப்பான்
அண்ணுடா அண்ணுடா ஆசாரி அண்ணுடா
யார்காணுமாசாரி அரியவொருவார்த்தை
மூளியுடசேனையெல்லாம் முழுதும்மடிவதற்கு
அவதானபந்தலை அடுக்காகத்தட்டிவிடு
போய்நீயும்தட்டிவிடும் புத்தியுள்ள ஆசாரி
பந்தலின்சூத்திரத்தைப் பார்த்துவிடுமாச்சாரி
என்றுசொல்லிநல்லதம்பி எடுத்துவிட்டாஞசாரி
தந்திரமாய்ப்பந்தலையும் தட்டிவிட்டாஞசாரி
அவ்தானபந்தலை அடுக்காகத்தட்டிவிட்டான்
மூளியுடசேனையெல்லாம் முறிந்துமடியுதங்கே
அப்போது-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
கையைமுறித்துக்கொண்டு கதவண்டைபோய்சேர்ந்தா
என்னசெய்யப்போறேனென்று ஏங்கியழுகலுற்ருள் [ள்
ஒற்றைக்குரலிட்டு ஓங்கியழுகலுற்ருள்

மாபாவிசீமையிலே மன்னர்களைத்தோற்றுவிட்டேன்
பெரும்பாவிசீமையிலே பெண்டுகளைத்தோற்றுவிட்டே [ன்
ஒருகோடிகும்பிழந்து ஒற்றைக்காலாகிவிட்டேன்
சூதுசெய்துகொன்ருனே துரோகியவளென்கணவன்
கல்லாலேபந்தலிட்டுக் காளைகளைக்கொன்றுவிட்டான்
ஒருத்திவந்துஉள்நுழைந்து ஒருகோடிகும்பிழந்தேன்
என்று-மூளியலங்காரி மூதேவிசண்டாளி
நின்றுபுலம்புகையில் கண்டானேராஜமன்னன்
ஆணழகன்நல்லதம்பி அலங்காரிக்கெடுத்துரைப்பான்
பத்துபேரைக்கொன்ற பழிகுலத்திவாடியென்று
எட்டுபேரைக்கொன்ற இழிகுலத்திவாடியென்று
என்னென்னபங்கம் இளங்கொடிக்குசெய்யலுற்ருன்
முன்சிகையைத்தான்பிடித்து நல்லமணப்பந்தலிலே
மூக்குஸ்தனமறுத்தான் முத்துமுடிபந்தலிலே [டான்
கொண்டையறுத்தானங்கே கொத்தோடேதொங்கவிட்
காதையறுத்தானங்கே கழுத்திலேதொங்கவிட்டான்
கண்ணைப்பிடுங்கியங்கே எண்ணெயையூற்றிவைத்தான்
இன்னமும்நல்லதம்பி ஏதேதுசெய்யலுற்ருன்
கழுதையைக்கொண்டுவந்து கட்டழகிமூளியரை
கழுத்திலெருக்கமாலே கனமாகச்சூட்டிவிட்டான் [தான்
கழுதையின்மேலேற்றிவைத்துகைகொட்டிதான்நகைத்
சேவகரைத்தானழைத்து தெருவிலிழுங்களென்ருன்
கழுதையைக்கைபிடித்து கடுகயிழுங்களென்ருன்
அழகுள்ளவீதியெல்லாம் அங்கங்கேசுற்றுமென்ருன்
நாலுதெருவிலே நாரியவள்கோலம்வந்தாள்
மூன்றுதெருவிலே மூதேவிகோலம்வந்தாள்
நாலுகோலம்வந்தபின்பு நல்லதம்பிஏதுசெய்தான்
மூளியலங்காரி மூதேவிதோஷியரை
சுண்ணும்புக்கால்வாயில் சுட்டானேசுந்தரியை
சுட்டானேசுந்தரியை சுகமானநல்லதம்பி
இப்படியாக இருக்கின்றவேளையிலே
மனையாளைச்சுட்டெரித்த மற்றுநாள்காசிராஜன்
மச்சான்வரவை மன்னவனும்பார்த்திருந்தான்
நல்லதங்காள்நாயகனும் நற்காலந்தான்பிறந்து
காசிராஜனுக்கு காலந்தெளிந்ததங்கே
காலமதுதெளிந்து கனத்தமழைபொழிந்து

சீமையதுதெளிந்து செல்வமழைபொழிந்து
முப்போகந்தான்விளைந்து முயற்சியுள்ளசீமையிலே
காலந்தெளிந்தது கம்புவிளைந்தது
சீமைசெழித்தது செல்வமழைபேய்ந்தது
நாடுசெழித்தது நல்லமழைபேய்ந்தது
கருப்புதெளிந்தபின்பு காசிராஜனேதுசெய்தான்
தாய்வீடுபோனபெண்ணை தானழைக்கவேண்டுமென்று
நல்லதங்காள்நாயகியை நாயகனழைக்கவென்று
செட்டிகடைக்குவந்தான் சேலைவிலைமதித்தான்
பார்ப்பான்கடைக்குவந்தான் பட்டாடைவிலைமதித்தான்
பாரியவளேறிவர பல்லக்குகொண்டுவாரான்
புத்திரர்களேறிவர பொன்காடிகொண்டுவாரான்
பலபலகனிவகைகள் பாலருக்குகொண்டுவாரான்
சிற்றுடைகொண்டுமன்னன்சிறுசதங்கைகொண்டுவாரா [ன்
தாய்வீடுபோனபெண்ணைத் தானழைக்கவாரானே
குதிரைபரிவாரம் கோடிதளமுன்னடக்க
யானைபரிவாரம் அடங்கும்பின்னடக்க
கவிஞர்கவிபாடக் கட்டியங்கள்கூறிவர
யானையுஞ்சேனையும் அத்தனையும்முன்னடக்க
எக்காளேதானூத இடிபாணந்தான்முழங்க
நாதசுரமூத நவிரிநற்கொம்பூத
பேரிகைகொட்டிவரப் பெரியசின்னமூதிவர
கத்திகட்டுஞ்சேவகருங் காவலரும்முன்னடக்க
வந்துநிறைந்தார்கள் வாசலிடங்கொள்ளாமல்
நல்லதம்பிக்குக்காசி நாடனெடுத்துரைப்பான் [ன்
மைத்துனரேமைத்துனரே மனையாட்டிஎங்கேயென்று
எலுமிச்சம்வர்னமான இளங்கொடியாளெங்கேஎன்று
என்றகாசிராஜனுக்கு அடைவாகஏதுசொல்வான் [ன்
அருந்தங்கைசெத்துமச்சான் அநேகநாளாச்சுதப்பா
அப்போதுகாசிராஜன் அடைவாகஏதுசொல்வான்
பெண்சாதிபோனால்போறாள் பிள்ளைகளெங்கேயப்பா
அப்போதுமன்னவனு மைத்துனனுக்கேதுசொல்வா
சேயர்களிறந்துபோய் சேனநாளாச்சுதப்பா [ன்
அப்போதுமன்னவனுமைத்துனனுக்கேதுசொல்வான்
ஒன்றிரண்டுமானாலும் உலகத்திலுள்ளதென்பார் [ன்
ஏழுபிள்ளைமாண்டவித மெனக்கறியச்சொல்லுமென்று

அந்தவுரைகேட்டு ஆணழகன் நல்லதம்பி
மர்மமொளியாமல் மைத்துனருக்கேதுசொல்வான்
வந்தாளே நல்லதங்காள் மக்களுந்தானுமாக
காட்டிலேகண்டுநான் வீட்டுக்குப்போங்களென்றேன்
எந்தனுரைப்படியே இளங்கொடியாள்வீடுவந்தாள் [ளூ
புத்திரர்களும் தானுமாக பொற்கொடியாள்வந்தாளென்
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
செய்தகொடுமையாலே செல்வவதிபிள்ளைகளும்
கோபம்பொறுக்காமல் குதித்தார்பொய்கையிலே
அந்தவிசேஷம் அறிந்துதானோடிவந்து
மாண்டவரைத்தானெடுத்து மயானச்சுடலையிலே
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
தங்கைபழிக்காக தகுந்தபழிவாங்கிவிட்டேன்
மக்கள்பழிக்காக மனையாளைக்கொன்றுவிட்டேன்
நான்-இறந்துமடியாமல் இருந்தேனுனக்காக
என்றஉரைகேட்டு ஏங்கிமனந்தளர்ந்து
பிள்ளைக்குக்காட்சியாய் பெண்கொண்டுவாராமல்
கலியாணஞ்செய்துநான் கண்குளிரப்பாராமல்
செல்வரைப்பார்க்கிலும்நான் சீமையாளப்போறேனோ
மைந்தரைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமேகாசிராஜன் இனியில்லாத்துக்கமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
அப்போதுநல்லதம்பி அதிகவிசனமுடன்
தங்கையைப்பார்க்கிலும்நான் தரணியாளப்போறேனோ
மச்சானைப்பார்க்கிலும்நான் மண்டலமாளுவேனோ
என்றுமவன் நல்லதம்பி இனியாருக்கோபமுடன்
கட்டாரிநட்டுமவன் கடுகமடிந்தானே
இந்தவிதமாக இவர்கள்மடிந்திருக்க

[நல்லதங்காள், நல்லதம்பி, காசிராஜன், ஏழுபிள்ளைகள் இவர்கள் மடிந்திருப்பதைக் கண்டு பார்வதியும், பரமசிவனும் வந்து எழுப்புதல்]

பார்வதிதேவியர்க்குப் பார்க்கமுடிபோகவில்லை
பரமசிவனுக்கு பார்க்கமுடிபோகவில்லை
ஈஸ்வரனுமீஸ்வரியும் இரக்கமுடன்தானெழுந்து
இடபவாகனமேறி இன்பமுடன்தானப்பொழுது

கைலாசம்விட்டுமவர் கடுகப்பயணமதாய்
கப்பரையில்தண்ணீர்கொண்டு கையில்பிரம்புகொண்டு
கையில்பிரம்பெடுத்து கப்பரையில்ஜலமெடுத்து
செத்தவர்கள்தன்மேலே சீராய்தெளிப்பதற்கு
பார்வதிதேவியரும் பரமசிவனுரும்
கைலாசம்விட்டல்லவோ கடுகவழிதாண்டி
ஆறுசுனே தாண்டி அதிகவனந்தாண்டி
இருண்டவனந்தாண்டி இவர்களும்வந்தார்கள்
பாழுங்கிணற்றருகே பரமசிவன்வந்துநின்று
இருண்டகிணற்றருகே ஈஸ்வரியும்வந்துநின்று
ஏழுபிள்ளைநல்லதங்காள் இறந்துகிடப்பவர்மேல்
தண்ணீரைத்தான்தெளித்துத் தட்டியெழுப்பினுர்கள்
அப்போ-தூங்கியெழுந்தவர்போல் சுகமாயெழுந்தார்க
ஏழுபிள்ளைதானுமப்போஎழுந்துமேதானும்வந்தார்[ள்
மச்சானும்மச்சானும் அச்சமில்லாதெழுந்தார்கள்
ஏழுபிள்ளைதானுமப்போ எழுந்திருந்துவந்தார்கள்
அப்போதுநல்லதங்காள் அரிவையெடுத்துரைப்பாள்
அரகராமகாதேவா அந்திவண்ணபரசுபாணி
எள்ளுக்குள்நிறைந்துநின்ற ஏகபரஞ்சுடரே
என்தாயேபார்வதியே என்னையாளவந்தவளே
எங்களையெழுப்பிவைத்த ஏகபராபரியே
உங்கள்தரிசனங்கண்டு உள்ளமெல்லாம்பூரித்தோம்
எங்களுக்குக்காட்சிதர இன்பமுடன்வுந்தீர்கள்
சரணஞ்சரணமென்று சாஷ்டாங்கமாய்ப்பணிய
ஐயனரனுரும் அம்மனும்போய்மறைந்தார்
இப்படியாக இளங்கொடியாளேதுசொல்வாள்
பத்தாவேபத்தாவே பாராளும்பத்தாவே
உன்பேச்சைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
வார்த்தைநான்கேளாமல் வகைமோசம்போனேனே
பெண்புத்தியாலேயபல்லோபிழைமோசம்வந்ததென்ருள்
தப்பாமல்வானம்பத்தா தலையிலிடித்துதங்கே
பேய்கொண்டுபாவியைநான்பிறப்பென்றுநம்பிவந்தேன்

சண்டாளஅண்ணனை நான் சதமென்றுநம்பிவந்தேன்
என்-ஆசைக்கணவா நீ அன்பாகவார்த்தைகேளும்
என்னைப்போல்பெண்சாதி இவ்வுலகிற்கிட்டாதோ
வேசிகிடையாளோ வெள்ளாட்டிகிடையாளோ
தாசிகிடையாளோ தகுமொருத்தியாகாதோ
நாட்டியப்பெண்களிலே நல்லப்பெண்கிட்டாதோ
உங்கள்குலமதிலே ஒருபெண்ணும்கிட்டாதோ
மனையாட்டிமாண்டாளென்று மாளவிதியுனக்கேன்
பெண்சாதிமாண்டாளென்று பின்னேமடியலாமோ
எனக்காகநீமாண்டால் ஏசாதேஇவ்வுலகம்
நீமாண்டுமடிந்தாக்கால் மண்டலத்தாரென்னசொல்வர் [ர்
செத்துமடிந்தாக்கால் சீமையுள்ளாரென்னசெய்வார்
எனக்காகஉன்னுயிரை ஏன்மாய்க்கவந்தீரிப்போ
என்றுமேகணவனுக்கு இயல்பாகத்தானுரைத்து
அண்ணடா அண்ணடா அண்ணியிடவார்த்தைகளை
கேட்டீரோ அண்ணவே கிளிமொழியாள்தன்வார்த்தை
மூளியலங்காரி மூதேவிசண்டாளி
அவளுடையதன்வார்த்தை அறியவே நீர்கேளும்
நான்வருஞ்சேதிதன்னை நாயகியாள்தான்கேட்டு
ஒடிக்கதவடைத்து ஒட்டிச்சுவர்மண்ணறைந்தாள்
சாத்திக்கதவடைத்துச் சரியாகமண்ணறைந்தாள்
பண்ணுதபாடெல்லாம் பாவிபடுத்திவைத்தாள்
அண்ணடா அண்ணடா ஆரணங்கைஇப்போது
ஆக்கினைசெய்யவேண்டாம் ஆழியில்வைக்கவேண்டாம்
இவளை-கல்லிலெழுதவேணும்கண்காண நாட்டவேணு
காரியுமிழவேணும் கண்டார்சிரிக்கவேணும் [ம்
என்றுமேநல்லதங்காள் இயல்பாகத்தானுரைக்க
அப்போதுநல்லதம்பி ஆணழகனேதுசொல்வான்
எந்தன்பிறப்பேநீ இளங்கொடியேநல்லதங்காள்
திக்கற்றபாவியைப்போல் தெருவிலுருண்டாயோடி
தாயற்றபாவியைப்போல் தரையிலுருண்டாயோடி

இப்போ-நானாண்டசீமையெல்லாம் நீயாளவேணுமம்
நீயாண்டசீமையெல்லாம் நானாளவேணுமம்மா [மா
என்றுமேநல்லதம்பி இன்பமாய்ச்சொல்லுகையில்
அந்தமொழிகேட்டு ஆரணங்கேதுசொல்வாள்
அண்ணாடா அண்ணாடா அழகுசிகாமணியே
செத்தோரிருந்தோமானால் சீமைக்குஆகாது
இப்போ-மூளியலங்காரி மூதேவிநாயகியை
பூமியில்வைக்கவேணும் போகிறவர்பார்க்கவேணும்
கல்லிலெழுதவேணும் கடுகவேநாட்டவேணும்
தாரியுமிழவேணும் கண்டார்நகைக்கவேணும்
என்றுமேதான்சொல்லி இன்பமாய்நல்லதங்காள்
அண்ணனைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
என்-அண்ணாவே அண்ணாவே அன்பாகநீர்கேளும்
ஆசாரிதன்னை நீ அதிகவிரைவுடனே
அழைத்தோடிவாருமென்று அரிவையெடுத்துரைப்பா
அப்போதுநல்லதம்பி அதிகதுரிதமுடன் [ள்
ஆசாரிதன்னை அவனழைத்தோடிவந்தான்
ஆசாரிதன்னைப்பார்த்து அரிவையெடுத்துரைப்பாள்
பட்டணத்திற்கீர்த்தியுள்ள பரங்கியாசாரி
எனக்கு-காசினியில்கோயிலொன்றுகட்டிவையுமாசாரி
மாதமொருதிருநாள் மகிழ்ச்சியாய்தானடத்தும்
வருஷமொருதிருநாள் வரிசையாய்தானடத்தும்
என்றுசொல்லிநல்லதங்காள்எந்திழையுமப்போது
நல்லதங்காள்ஏழுபிள்ளை நாட்டில்வன்னிமரமாய்
வன்னிமரக்கண்ணாகி மாசின்றிநிற்கின்றார்கள்
நினைத்தவரமளித்து நீனிலத்தில்வாழ்ந்திருக்க
மச்சானும்மச்சானும் மங்கைநல்லதங்காளை
கண்டுமகிழ்ந்திருவர் கைலாயஞ்சேர்ந்தார்கள்
சடையிற்பிறையணிந்த சங்கரனார்தன்னருளால்
பாரிலுள்ள ஆடவரும் பாலகரும்ஆரியரும்
நாரியர்உளங்களிக்க நல்லதங்காள்தன்கதையை

அஷ்டதிசைபுகழ் அச்சிலிதைதானியற்ற
கற்றோரும்மற்றோரும் களிப்பாய்படிப்பதற்கு
சொற்குற்றமில்லாமல் சுத்தப்பிரதியதாய்
தம்மாலியன்றமட்டும் தப்பிதங்களைத்திருத்தி
இம்மாநிலத்தோர்புகழ் இரத்தின நாயகர்ஸன்ஸ்
பச்சைமயிலேறும் பார்வதிதன்னருளால்
அச்சிற்பதிப்பித்து அனைவோர்க்குமுதவினோர்
ஞானந்தரும்நூல்களை நாடோறும்அச்சியற்றும்
திருமகள்விலாச அச்சியந்திரசாலையும்
ஆல்போல்தழைத்து அறுகுபோல்வேரூன்றி
பால்போல்ருசிக்க பாரில்மிகத்தான்வாழி
மூங்கில்போல் அன்னை முசியாமல்தான்வாழி
ஓங்கிநால்வேத மூயிர்பலவுந்தான்வாழி
வாழிவாழியென்று வரமளித்தாரீஸ்வரனார்

நல்லதங்காள் கதை முற்றிற்று.

---

திருமகள் விலாச அச்சகம் சென்னை—1. 1965.